தி.க.மே.து.ந.க.எண்.எ7/ 4069/2007
ஆணையரின் 5.12.2007 நாளிட்ட குறிப்பு

**31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.22/2008 பொருள் எண்.22

**திடக்கழிவு மேலாண்மை நடவடிக்கைகளை இந்திய அரசின் நகராட்சி திடக்கழிவுகள்(மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகள் நடைமுறையில் கடைபிடிக்க முறைபடுத்தும் விதிகளை இயற்றுதல்**

இந்திய அரசாங்கம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986ன் நகராட்சி திடக்கழிவுகள்(மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகள் 2000–ஐ இயற்றியுள்ளது. அந்த விதிகளின்படி குப்பைகள் அவைகளை உருவாக்கும் மக்களால் அவைகள் உருவாகும் இடத்திலேயே மக்கும் குப்பை என்றும் மக்காத குப்பை என்றும் தரம் பிரிக்கப்பட்டு நகராட்சிகளிலிருந்து குப்பை சேகரிக்க வரும் பணியாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். மக்காத மற்றும் மறு சுழற்சிக்கு பயன்படும் குப்பை கழிவுகள் மறு சுழற்சி செய்யும் தொழிலகங்களுக்கு திருப்பப்பட வேண்டும். எதற்கும் உதவாத குப்பை கழிவுகள் மற்றும் கற்கூளங்கள் மட்டும் குப்பை கொட்டும் வளாகத்தில் களையப்பட வேண்டும். இவ்வாறு செய்தால், குப்பை கொட்டும் வளாகத்தின் சுற்றுச்சூழல் மற்றும் நிலத்தடி நீர் மற்றும் இயற்கை ஆதாரங்கள் ஆகியவைகளுக்கு எந்த ஒரு கேடும் ஏற்படாது. விதிகளின்படி முதலில் எடுக்க வேண்டிய நடவடிக்கை குப்பையிலிருந்து உரம் தயாரிப்பதாகும். இவ்வாறு உரம் தயாரிக்கும் திட்டம் வெற்றியடைய தயாரிக்கப்படும் உரம் விதிகளில் நிர்ணயிக்கப்பட்ட தரம் உடையதாக இருக்க வேண்டும். குப்பையிலிருந்து தயாரிக்கப்படும் உரம் நிர்ணயிக்கப்படும் தரம் உடையதாக இருக்க மக்கும் குப்பை அதாவது உயிரியல் ரீதியில் அதில் உள்ள நுண்மங்கள் வினைபுரிதலால் அழுகும் குப்பைகள் மட்டுமே உரமாக மாற்றப்படவேண்டும்.

மேலும் கட்டடக்கழிவுகள் மற்றும் கட்டுமான கழிவுகள், மண் மற்றும் மணல் ஆகியவைகள் மக்கும் குப்பையுடன் கலந்து இருந்தால் அத்தகைய குப்பையை உரம் தயாரிக்க இயலாது. எனவே, அவைகளை தனியே கையாளுதல் வேண்டும். அத்தகைய கழிவுகள் தாழ்வான பகுதிகளை நிரப்பவும், மற்றும் சாதாரண நிலத்தில் சாலைகளை போடுவதற்கு முன் பலப்படுத்தவும் பயன்படுத்தப்படலாம். மேலும் இத்தகைய கழிவுகளை குப்பை கொட்டும் வளாகத்தில் நிரப்பப்பட்ட குப்பையின் மீது நிரவி சமன்செய்யவும் பயன்படுத்தலாம்.

ஆக, குப்பை கொட்டும் வளாகங்களை சுற்றுச்சூழல் பாதிப்பு இன்றி பராமரிக்கவும், மற்றும் மக்கும் குப்பைகளை உரமாக மாற்றவும், அவ்வாறு தயாரிக்கப்படும் உரம் தரம் உள்ளதாக இருக்கவும் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை பிரிப்பது , சேகரிப்பது, சேர்த்து வைப்பது, அவைகளை கையாளுவது உரமாக்குவது, அல்லது குப்பை கொட்டும் வளாகங்களில் களைவது ஆகியவைகளை நகராட்சி திடக்கழிவுகள்(மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகள் 2000ல் சொல்லப்பட்டுள்ள வரையறைகளின்படி செயலாக்க சென்னை மாநகராட்சி விதிகளில் உரிய சட்ட வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும். இந்த விதிகளை பின்பற்ற பொதுமக்களையும் பொறுப்பு கொண்டவர்களாகவும் கடமை உள்ளவர்களாகவும் செயல்பட வைக்க முறைபடுத்தும் விதிகள் அவசியம். சென்னை மாநகராட்சி சட்டம் பிரிவு 349ல் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு இந்த சட்டத்தின் கீழ் தேவையான உரிய துணைவிதிகளை இயற்ற அதிகாரம் உள்ளது. ஆனால் அவ்வாறு இயற்றப்படும் விதிகள் தமிழக அரசினால் ஒப்புதல் வழங்கப்பட்ட பிறகே சட்டப்படி அமலாக்கம் செய்யப்பட கூடியவை.

ஏற்கனவே, மும்பை மாநகராட்சியில் இது போல விதிகள் அமலில் உள்ளது. அந்த விதிகளை கருத்தில் கொண்டு சென்னை மாநகராட்சிக்கு தகுந்தவாறு விதிகள் வரைவு செய்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த விதிகள் சென்னை மாநகராட்சி திடக்கழிவுகள்(கண்ட இடங்களில் குப்பையினை போடுதலை தடுத்தல், குப்பையினை தரம்பிரித்தல், சேர்த்துவைத்தல், வழங்குதல் மற்றும் சேகரித்தல் ஆகியவைகளை முறைபடுத்துதல்) விதிகள் 2007 என்று பெயரிடப்பட்டுள்ளது.

மன்றத்தின் அனுமதி பெற்ற பிறகு இந்த விதிகள் அரசின் ஒப்புதல் வேண்டி அனுப்பப்படும்.

**தி.க.மே.து.ந.க.எண்.எ7/ 4069/2007**

எனவே, இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் சென்னை மாநகராட்சி திடக்கழிவுகள்(கண்ட இடங்களில் குப்பையினை போடுதலை தடுத்தல், குப்பையினை தரம்பிரித்தல், சேர்த்துவைத்தல், வழங்குதல் மற்றும் சேகரித்தல் ஆகியவைகளை முறைபடுத்துதல்) விதிகள் 2007(வரைவு)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

**இணைப்பு**

**சென்னை மாநகராட்சி திடக்கழிவுகள்(கண்ட இடங்களில் குப்பையினை போடுதலை தடுத்தல், குப்பையினை தரம்பிரித்தல், சேர்த்துவைத்தல், வழங்குதல் மற்றும் சேகரித்தல் ஆகியவைகளை முறைபடுத்துதல்) விதிகள் 2007(வரைவு)**

சென்னை மாநகர மாநகராட்சி ஆட்சி நிலவரைக்குள் நகராட்சி திடக்கழிவுகளை கையாளுதல் சென்னை மாநகராட்சியின் கடமையாகும். மேலும் அவைகளை சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986இன் கீழ் இயற்றப்பட்டுள்ள நகராட்சி திடக்கழிவுகள்(மேலாண்மை மற்றும் கையாளல்)விதிகள் 2000ன் படி கையாள வேண்டும்.

திடக்கழிவு மேலாண்மை திட்டங்களை திறம்பட செயலாக்கவும், இவை தொடர்பான சட்டவழிவகைகளை கடுமையாக பின்பற்றவும் முறைபடுத்தும் விதிகள் அவசியம்.

இவைகளை கருத்தில் கொண்டு சென்னை மாநகராட்சி கீழ்வரும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

(1) வீட்டுக்கு வீடு சென்று குப்பையினை தரம் பிரித்தல்

(2) பொது இடத்தில் வைக்கப்படும் குப்பை தொட்டிகளின் எண்ணிக்கையினை குறைத்தல்.

(3) குப்பைமாற்று நிலையங்களை நவீனமயமாக்குதல்

(4) உபயோகத்தில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களை சீரமைத்தல், குப்பை பதனிடுதல் வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் சுகாதார குப்பை கொட்டும் தளங்களை அமைத்தல்

இருப்பினும் பொதுமக்கள் குப்பையினை அவர்கள் மாநகராட்சியிடம் தரம் பிரிக்காமல் வழங்கினால் சென்னை மாநகராட்சியினால் நகராட்சி திடக்கழிவுகள்(மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகளின் வழிவகைகளை நிறைவு செய்ய இயலாது. எனவே, பொது மக்கள் குப்பையினை தரம் பிரிக்காமல் வழங்குவதை தடுக்கவும், குப்பை தரம் பிரிக்கப்படுத்துவதை உறுதி செய்யவும், குப்பை சுகாதாரமான முறையில் தரம்பிரிக்கப்பட்டு சேரிக்கப்படுதல், சேர்த்து வைக்கப்படுதல், போக்குவரத்து செய்யப்படுதல் ஆகியவைகளை அமலாக்க முறைபடுத்தும் விதிகள் அவசியம்.

எனவே, சென்னை மாநகர மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 349ன் கீழ் மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி சென்னை மாநகராட்சி திடக்கழிவுகள்(கண்ட இடங்களில் குப்பையினை போடுதலை தடுத்தல், மற்றும் குப்பையினை தரம்பிரித்தல், சேர்த்துவைத்தல், வழங்குதல், மற்றும் கேகரித்தல் ஆகியவைகளை முறைபடுத்துதல்) விதிகள் 2007 இயற்றி வெளியிடப்படுகிறது.

இந்த விதிகளின் நோக்கம் கீழ்வருமாறு

(1) திடக்கழிவு மேலாண்மையின் தற்போதைய செயல்பாட்டு முறைகளை மேம்பாடு செய்து சுற்றுச்சூழல் கேடடைவதை தடுத்து மாநகரின் வாழும் தரத்தினை உயர்த்துதல்.

(2) மாநகரில் பொதுமக்களின் சுகாதாரத்தை பேணி மாநகரின் தூய்மையின் நிலையினை உயர்த்துதல்

(3) பொது இடங்களில் குப்பை பரவலாக தெரியாமல் பார்த்துக்கொள்ளுதல்.

(4) குறிப்பிட்ட வகைகளாக குப்பை தரம் பிரிக்கப்படுதல்.

(5) அதிகபட்ச அளவு மறுசுழற்சிக்கு பயன்படும் குப்பைகள் அவைகள் உருவாகும் இடத்திலேயே தரம் பிரிக்கப்படுதல்.

(6) பன்முகப்படுத்தப்பட்ட எரு தயாரிக்கும் முறையினை ஊக்குவித்தல்

(7) குப்பை கொட்டும் வளாகத்தில் சேரும் குப்பையின் அளவை குறைத்தல்.

(8) குப்பையை கையாளுதல் மற்றும் போக்குவரத்து செலவினங்களை குறைத்தல்.

(9) மழைநீர் மற்றும் கழிவு நீர் வடிகால்களில் சிக்கி தெருக்கள் மாசுபடுவதை தடுத்தல்.

(10) கழிவுகளினால் ஏற்படும் பிரச்சனைகளை பொதுமக்கள் அறிய செய்து பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.

(11) குடிமக்கள் மற்றும் குடியிருப்போர் சங்கங்களுக்கு நகராட்சி திடக்கழிவுகள்

( மேலாண்மை மற்றும் கையாளல்)விதிகளை திறப்பட அமலாக்கம் செய்வதில் பங்கேற்க தேவையான அதிகாரங்கள் மற்றும் வழிவகைகளை ஏற்படுத்துதல்.

1. சிறு தலைப்பு மற்றும் அமலாக்கம்

இந்த விதிகள் சென்னை மாநகராட்சி திடக்கழிவுகள்(கண்ட இடங்களில் குப்பையினை போடுதலை தடுத்தல், குப்பையினை தரம்பிரித்தல், சேர்த்துவைத்தல், வழங்குதல் மற்றும் சேகரித்தல் ஆகியவைகளை முறைபடுத்துதல்) விதிகள் 2007என்று அழைக்கப்படும்.

இந்த விதிகள் சென்னை மாநகராட்சி அறிவிக்கையின் மூலம் குறிப்பிடும் நாளிலிருந்து அமலுக்கு வரும்.

2. பொருந்தும் அளவு

இந்த விதிகள்

(1) சென்னை மாநகராட்சியின் ஆட்சி நிலவரையின் கீழ் வரும் ஒவ்வொரு பொது இடத்திற்கும்,

(2) நகராட்சி திடக்கழிவுகளை உருவாக்கும் ஒவ்வொருவருக்கும் அது தனிநபராக இருந்தாலும், குழுவாக இருந்தாலும், ஒரு அமைப்பு அல்லது நிறுவனம் அல்லது நிறுமமாக இருந்தாலும்,

(3) ஒவ்வொரு கட்டடத்தின் உரிமையாளர் அல்லது அதனை உபயோகிப்பவர் அல்லது அதனை தனது கையகத்தே வைத்திருப்பவர்கள்

ஆகிய அனைவருக்கும் பொருந்தும்

3. சொற்பொருள் விளக்கம்

கீழ்வரும் சொற்கள் அவை உபயோகப்படுத்தப்படும் இடங்களில் அவற்றிற்கு வேறு பொருள் வழங்கப்படவேண்டி இருந்தால் அன்றி அவைகள் கீழ்வரும் பொருள் படும்.

1. **முற்றம்:–** வடிகால், நடைபாதை மற்றும் நடைபாதைசாலையின் விளிம்பு மேடைக்கல் உட்பட, எந்த ஒரு கட்டடத்தையும் ஒட்டி ஆரம்பித்து நடைபாதையின் விளிம்பு மேடைக்கல் வரை நீளும் பொது இடம்

2. **மண்டல அலுவலர்:–** மண்டல அலுவலர் என்பவர், சென்னை மாநகராட்சியின் அந்தந்த மண்டலத்தின் நிர்வாகத்திற்கு பொறுப்புடைய அலுவலர் ஆவார்.

3. **முகமை அமைப்பு அல்லது முகவர்:–** முகமை அமைப்பு அல்லது முகவர் என்பவர், சென்னை மாநகராட்சியால் ஒப்பந்த அடிப்படையில் ஏதேனும் ஒரு அல்லது ஒரு சில அல்லது அனைத்து குப்பை அள்ளுதல், குப்பை அகற்றுதல், தெருக்களை பெருக்குதல் பொது இடங்களை சுத்தம் செய்தல் போன்ற சென்னை மாநகராட்சியினால் நிறைவேற்றப்பட வேண்டிய திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை நிறைவேற்ற நியமிக்கப்பட்ட அமைப்பு அல்லது நபர் ஆகும்.

4. **உயிரியல் ரீதியில் அழுகக்கூடிய கழிவு:–** தாவர அல்லது விலங்கினத்தினை ஆதாரமாகக் கொண்ட அதாவது சமையலறைக்கழிவுகள், மலர் மற்றும் மலர்க்கழிவுகள், உதிர்ந்த இலைகள், தோட்டக்கழிவுகள், விலங்குகளின் கழிவுகள், மற்றும் மீன் மற்றும் இறைச்சிக்கழிவுகள் ஆகியவைகள் உயிரியல் ரீதியில் அழுகக்கூடிய கழிவுகள் ஆகும்.

5. **மருத்துவக்கழிவுகள்:–** மருத்துவக்கழிவுகள் என்பது, மனிதர்களின் அல்லது விலங்குகளின் நோயை இனங்காணுதல், அதற்கு சிகிச்சை அளித்தல் அல்லது நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போடுதல், அது தொடர்பான ஆராய்ச்சிகள் மற்றும் பரிசோதனைகள் மற்றும் உயிரியல் அணுக்களை தயாரித்தல் ஆகிய நடவடிக்கைகளின் மூலம் உருவாகும் கழிவுகள் ஆகியவைகள் ஆகும்.

6. **உயிரியல் ரீதியில் அழுகுதல்:–** உயிரியல் ரீதியில் அழுகுதல் என்பது, ஒரு பொருளில் உள்ள அழுகக்கூடிய நுண்மங்கள் அழுகி அதிக அளவிலான இயற்கை எரிவாயுவினை உருவாக்கும் ஒரு வினைபுரியும் முறையாகும்.

7. **சென்னை மாநகராட்சி:–** சென்னை மாநகராட்சி என்பது, சென்னை மாநகர மாநகராட்சி சட்டம் 1919ல் சொல்லப்பட்ட பொருள்படும். மேலும் அது அதன் சார்பில் அதற்கென வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி செயல்படும் அலுவலர்கள் மற்றும் அவர்களின் முகவர்கள் மற்றும் முகமை அமைப்பினையும் குறிக்கும்

8. **அதிக அளவில் குப்பை உருவாக்குபவர்கள்:–** அதிக அளவில் குப்பை உருவாக்குபவர்கள் என்பது கீழ் சொல்லப்பட்டுள்ளவர்களை குறிக்கும்

(1) 50 எண்ணிக்கை இல்லங்களை கொண்ட ஒரு குடியிருப்பு சங்கம் அல்லது குடியிருப்பு வளாகத்தின் உரிமையாளர்களை அங்கு குடியிருப்பவர்களின் அல்லது அந்த வளாகத்தில் ஒவ்வொரு உரிமையாளர் மற்றும் அங்கு இருப்பவர்களின் பிரதிநிதியாக செயல்படுபவர்,

எனினும், இந்த எண்ணிக்கையினை சென்னை மாநகராட்சி பொது அறிவிக்கையின் மூலம் குறைக்கலாம் அல்லது அதிகரிக்கலாம்.

(2) முதல் மற்றும் இரண்டாம் தர உணவகங்கள்

(3) நட்சத்திர அல்லது சாதாரண உணவுவிடுதிகள், அங்காடிகள் தொழிற்பேட்டைகள் மற்றும் வணிக வளாகங்கள்/வணிக மாளிகைகள்

(4) அரசு மற்றும் அரசுசார் அலுவலக கட்டடங்கள்

(5) மகிழகங்கள், உடற்பயிற்சி கூடங்கள், திருமண மண்டபங்கள், சம்பந்தப்பட்ட மண்டல அலுவலர்களால் குறிப்பிட்டு அறிவிக்கப்படும் பொழுதுபோக்கு மற்றும் கேளிக்கை நிலையங்கள்

9. **தலைமைப் பொறியாளர்:–** தலைமை பொறியாளர் என்பது சென்னை மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் துறையின் தலைமை பதவி வகிப்பவர்

10. **பொதுமக்கள் தூய்மைக் குழு:–** பொது மக்கள் தூய்மைக் குழு என்பது அந்தந்த மண்டல அலுவலரால் ஒரு வார்டின் தூய்மையினை ஆய்வு செய்யவும் அறிக்கை சமர்ப்பிக்கவும் மற்றும் தூய்மைப்பணிகள் முகாம்கள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் ஆகியவற்றில் கலந்து கொள்ளவும் மண்டல அலுவலரால் அனுமதிக்கப்பட்ட குழுவாகும்.

11. **தூய்மை சென்னை பகுதி:–** சென்னையின் தூய்மைப் பகுதி என்பது சென்னை மாநகராட்சியின் ஆணையரால் அல்லது மண்டல அலுவலரால் உயர்தர தூய்மையை பராமரிக்கவும், குப்பையை கண்ட இடத்தில் போடுவதை அறவே அனுமதிக்க இயலாத மற்றும் குப்பை கண்ணில் புலப்படாத இடமாக சென்னையின் ஒரு இடத்தை அல்லது இடங்களை பராமரிக்க, ஒரு சாலை அல்லது சாலைகள் அல்லது அதனுள் அடங்கும் அனைத்து பொதுச் சாலைகளையும் மற்றும் பிற பொது இடங்களையும் அரசு கட்டடங்களையும் உள்ளடக்கிய பொது இடம் அல்லது இடங்கள் என்று பொருள்படும்.

12. **குப்பை சேகரித்தல்:–** குப்பை சேகரித்தல் என்பது குப்பையினை எந்த ஒரு குப்பை சேகரிக்கும் மையம் அல்லது எந்த ஒரு சேகரிக்கும் இடத்திலிருந்தும் அகற்றுதல் என்று பொருள்படும்.

13. **குப்பையை அவைகள் உருவாகும் இடத்திலிருந்து அகற்றுதல்:–** ஒரு வீடு அல்லது கட்டடத்திலிருந்து சென்னை மாநகராட்சியினால் குப்பை நேரடியாக எந்த ஒரு கட்டடத்திலிருந்து அல்லது கொத்தாக உள்ள ஒரு கட்டட வளாகத்தின் பொதுவான ஒரு இடத்திலிருந்து குப்பையை அகற்றுதல் என்று பொருள்படும். இது வீட்டுக்கு வீடு சென்று குப்பை அகற்றுதல் மற்றும் இல்லங்களின் வாயிலுக்குச் சென்று குப்பை அகற்றுதல் என்றும் குறிப்பிடப்படும்.

14. **சமுதாய குப்பை சேகரிக்கும் மையம்:–** ஒன்று அல்லது பல கட்டடங்களின் உரிமையாளர்கள் அல்லது அதில் குடியிருப்போர் அவர்களால் அந்த ஏதேனும் ஒரு கட்டடத்தில் அல்லது அந்த கட்டடங்களுக்கு ஒரு பொதுவான இடத்தில் குப்பையினை தரம் பிரித்து சேர்த்துவைக்க ஏற்படுத்தப்பட்ட ஒரு வசதி சமுதாய குப்பை சேர்த்து வைக்கும் மையம் என்று பொருள்படும்.

15. **தொழு உரமாக்குதல்:–** தொழு உரமாக்குதல் என்பது குப்பையில் உள்ள அழுகக்கூடிய தாவர நுண்ணுயிர்களை எருவாக மாற்ற கையாளப்படும் ஒரு கட்டுப்படுத்தப்பட்ட ஒரு செயல்முறையாகும். அழுகக்கூடிய குப்பையினை மண்புழு கொண்டு உரமாக மாற்றும் செயல்முறையும் இதில் அடங்கும்.

16. **கட்டுமான மற்றும் இடிபாட்டுக்கழிவுகள்:–** கட்டுமானம் மற்றும் ஒரு கட்டடத்தை மறு வடிவமைப்பு செய்தல், பழுதுபார்த்தல் மற்றும் இடித்தல் ஆகிய நடவடிக்கைகளில் உருவாகும் அபாயகரமற்ற கட்டுமானக்கழிவுகள், கட்டிட இடிபாட்டுக்கழிவுகள், துகள்களாக உள்ள கட்டுமான மற்றும் கட்டட இடிபாட்டுப் பொருட்கள் **கட்டுமான மற்றும் இடிபாட்டுக்கழிவுகள் ஆகும்.**

17. **சேரி தத்தெடுப்பு திட்டம்:–** சென்னை மாநகராட்சியினால் குடிசை பகுதியின் தூய்மையினை பராமரிக்க தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அல்லது அரசுசாரா நிறுவனங்களின் மூலம் அல்லது தனியார் ஒப்பந்த முறையின் மூலம் நிறைவேற்றப்படும் அல்லது அதற்கென தனியாக உள்ள ஒரு திட்டம் குடிசைப்பகுதி தூய்மை திட்டம் ஆகும்.

18. **குப்பையினை வழங்குதல்:–** சென்னை மாநகராட்சியின் குப்பை சேகரிக்க வரும் பணியாளரிடம் அல்லது சென்னை மாநகராட்சியினால் இதற்கென நியமிக்கப்பட்ட, ஒப்பந்தம் வழங்கப்பட்ட ஒப்பந்ததாரரிடம் அல்லது அவர்களின் பணியாளரிடம் அல்லது குப்பை சேகரிப்பதற்கென உரிமம் வழங்கப்பட்ட உரிமதாரரிடம் அல்லது அவர்களின் பணியாளர்களிடம் குப்பையை வழங்குவது அல்லது குப்பை சேகரிக்க வரும் வாகனங்களில் வரும் குப்பை சேகரிப்பவர்களிடம் குப்பையினை வழங்குவது, குப்பையினை வழங்குவது என்று பொருள்படும்.

19. **உலர் குப்பை:–** இந்த விதிகளின் விதி **5.1**(vi)ல் சொல்லப்பட்டுள்ள நகராட்சி திடக்கழிவுகளின் வகைகள் என்று பொருள்படும்.

20. **உலர்குப்பையை பிரித்தெடுக்கும் மையம்:–** குப்பையை பெறுவதற்கும் மற்றும் தரம் பிரித்தெடுப்பதற்கும் குறிக்கப்பட்ட எந்த ஒரு நிலம், கொட்டகை, பெட்டிக்கடை போன்ற கட்டுமானம், அல்லது சென்னை மாநகராட்சியின் அல்லது அரசின் நிலத்தில் கட்டப்பட்ட வேறு பிற கட்டுமானங்கள் உலர் குப்பையை பிரித்தெடுக்கும் மையம் என்று பொருள்படும்.

21. **புரிந்து கொள்ள அவகாசகாலம்/எச்சரிக்கை காலம்:–** இந்த விதிகளில் சொல்லப்பட்டுள்ள வழிவகைகளை மீறுவதற்கு அட்டவணை 1ல் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்தொகையினை வசூலிப்பது துவங்கப்படாத காலக்கட்டம், புரிந்து கொள்ள அவகாச காலம்/எச்சரிக்கை காலம் ஆகும்.

22. **அதிக அளவிலான தோட்ட மற்றும் தாவரக் கழிவுகள்:–** பூங்காக்கள், தோட்டங்கள், போக்குவரத்து தீவுகள் மற்றும் இன்ன பிற கழிவுகள் அதிக அளவிலான தோட்ட மற்றும் தாவரக்கழிவுகள் என்று பொருள்படும். மேலும் அது தினசரி சேகரிக்கப்பட வேண்டிய அழுகக்கூடிய குப்பை சேகரிப்பு முறையில் சேர்க்கபட இயலாத கத்திரிக்கப்பட்ட புல், மரவேர்கள், மரக்கிளைகள், பச்சை மற்றும் உலர்ந்த இலைகள் மற்றும் குச்சிகள் தண்டுகள் மற்றும் கத்திரிக்கப்பட்ட மரங்களின் இலை மற்றும் தண்டுப்பகுதிகள் ஆகியவைகளையும் உள்ளடக்கும்.

23. **குப்பையை உருவாக்குபவர்:–** சென்னை மாநகராட்சியின் ஆட்சி நிலவரைக்குள் குப்பையினை உருவாக்கும் ஒவ்வொருவரையும் குப்பையை உருவாக்குபவர் என்ற சொல் குறிக்கும்.

24. **குப்பை அகற்றும் வண்டி:–** குப்பை அகற்றும் வண்டி என்பது மணியோசை எழுப்பி குப்பை சேகரிக்கும் வண்டி அல்லது அது போல இனம் காணக்கூடிய ஒலியெழுப்பி வரும் குப்பை சேகரிக்கும் வண்டிகள் குப்பை அகற்றும் வண்டி என்று பொருள்படும்.

25. **அபாயகரமான கழிவுகள்:–** சில சூழ்நிலைகளில் தீப்பிடிக்கக்கூடிய, ஆபத்து விளைவிக்கக்கூடிய, வெடிக்கக்கூடிய அல்லது அரிப்புத்தன்மை வாய்ந்த அல்லது அரிப்பு அல்லது எரிச்சல் உணர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய கழிவுகள் அபாயகரமான கழிவுகள் என்று பொருள்படும்.

26. **வீட்டுக்கால்வாய்:–** வீட்டுக்கால்வாய் என்பது கழிவுநீர் செல்வதற்காக கட்டப்பட்ட ஒரு நீண்ட வடிவிலான பாதை அல்லது கழிப்பறை அசுத்தங்கள், சிறுநீர் செல்வதற்கான கால்வாய் அல்லது கழிவுநீர் தொட்டி அல்லது குழி, அவைகளை சுத்தம் செய்வதன் மூலம் உருவாகும் அசுத்தப்பொருட்கள் உள்ள இடம் ஆகும்.

27. **கற்கூளங்கள்:–** கற்கூளங்கள் என்பது, எந்த ஒரு திடக்கழிவு அல்லது பதனிடுதலில் எஞ்சிய, வடிவ, வேதியில் மற்றும் உயிரியல் ரீதியில் சுகாதார குப்பை கொட்டும் முறைக்கு பயன்படும் கழிவுகள் ஆகும்.

28. **குப்பையினை நிலத்தில் களைதல்:–** குப்பையினை நிலத்தில் களைதல் என்பது, எதற்கும் பயன்படாத குப்பைகளை நிலத்தடி நீர் மாசுபடுதல், தரைநீர் மாசுபடுதல், காற்றுமண்டலம் மாசுபடுதல், குப்பைகள் காற்றில் பறத்தல், துர்நாற்றம் வீசுதல், தீ அபாயங்கள் ஏற்படுதல், பறவைகளால் தொல்லை ஏற்படுதல், பூச்சிகள் மற்றும் பிராணிகளால் தொல்லை ஏற்படுதல், விஷவாயு உற்பத்தியாதல், நிலச்சரிவு ஏற்படுதல் மண்சரிவு ஏற்படுதல் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்க ஏற்படுத்தப்பட்ட வழிவகைகளுடன் வடிவமைக்கப்பட்ட ஒரு தளத்தில் குப்பையினை களைதல் என்று பொருள்படும்.

29. **குப்பை :–** குப்பை என்பது

(1) கண்ணாடி, உலோகம், சிகரட் துண்டுகள், காகிதம், துணிவகைகள், மரக்கட்டைகள், உணவு மற்றும் தேவையில்லை என்று போடப்பட்ட வாகன உதிரி பாகங்கள், வீட்டு உபயோகப்பொருட்கள் மற்றும் அவைகளின் பாகங்கள், பாய்கள், கட்டுமான மற்றும் இடிபாட்டுப்பொருள்கள் தோட்டக்கழிவுகள் மற்றும் கத்திரிக்கப்பட்ட செடிக்கழிவுகள், மண், மணல் அல்லது பாறைகள், உட்பட எந்த ஒரு திடநிலையில் உள்ள அல்லது திரவ நிலையில் உள்ள வீட்டு அல்லது வணிகக் கழிவுகள், கட்டுமான மற்றும் கட்டட இடிபாட்டுக்கழிவுகள் அல்லது அசுத்தங்களையும்

(2) அதன் அளவு, வடிவம், தன்மை அல்லது கனபரிமாணம் தொல்லை ஆகியவை காரணமாக அல்லது அந்த இடத்தின் நியாயமான உபயோகத்தன்மையினை பாதிக்கக்கூடிய, பொது இடத்தில் போடப்படும் எந்த ஒரு பொருளையும்

உள்ளடக்கும்

30. **குப்பை போடுதல்:–** குப்பை போடுதல் என்பது எந்த ஒரு இடத்திலும் தொல்லை பயக்குமளவிற்கு குப்பையினை போடுதல் அல்லது அவ்வாறு போடப்படும் குப்பை போடப்பட்ட இடத்தில் பறத்தல், அடித்துச்செல்லுதல், ஊடுருவுதல் ஆகியவைகளினால் ஒரு பொது இடம் அசுத்தமடைதலையும் குறிக்கும்.

**உள்ளூர் குடி மக்கள் குழு:–** உள்ளூர் குடி மக்கள் குழு என்பது, ஒரு குறிப்பிட்ட பகுதியின் தூய்மையை பராமரிக்க அல்லது உருவாகும் குப்பையின் அளவை குறைக்க, குப்பை தரம் பிரித்தல் மற்றும் மறுசுழற்சி செய்தல் ஆகியவற்றிற்கு பொறுப்பு ஏற்றுக்கொள்ளும் அந்த பகுதியை சார்ந்த குடியிருப்பு அல்லது வணிக வளாகத்தின் உரிமையாளர்கள் அல்லது குடியிருப்போர் அல்லது உரிமையாளர்கள் அல்லது குடியிருப்போர்களின், கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அதே நேரத்தில் அந்தப்பகுதிக்கான மண்டல அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களைக் குறிக்கும்.

32. **ஆணையர்:–** ஆணையர் என்பது சென்னை மாநகர மாநகராட்சி சட்டம் 1919ல் ஆணையர் என்ற சொல்லுக்கு கூறப்பட்டுள்ள கடமைகளும் அதிகாரங்களும் உள்ளவர் என பொருள்படும்.

33 **நகராட்சி திடக்கழிவுகள்:–** நகராட்சி திடக்கழிவுகள் என்பது நகராட்சி திடக்கழிவுகள்(மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகள் 2000ல் சொல்லப்பட்டுள்ள பொருள்படும்.

34. **மாநகராட்சி:–** சென்னை மாநகராட்சி அல்லது அதன் பிரதிநிதிகள் என இடத்திற்கேற்ப பொருள்படும்.

35. **அருகாமையில் உள்ள இடம்:–** அருகாமையில் உள்ள இடம் என்பது எல்லைகள் வகுக்கப்பட்டு, வரைபடத்துடன் அதன் தன்மைகள் குறிப்பிடப்பட்டு அல்லது அங்கு வாழும் மக்கள் பற்றிய விவரங்களை அளித்து ஆணையர் அல்லது அந்தந்த மண்டல அலுவலரால் குறிப்பிடப்படும் இடம் என்று பொருள்படும்.

36. **புதிய கட்டுமானம்:–** புதிய கட்டுமானம் என்பது ஜனவரி 9, 2008–ம் ஆண்டுக்கு பிறகு, அல்லது சென்னை மாநகராட்சியினால் அறிவிக்கையின் மூலம் குறிப்பிடப்படும் நாளிற்கு பிறகு, மண்புழு மூலம் எரு தயாரிக்கப்படும் வசதிகளுடன் கட்டப்பட வேண்டிய அனைத்து கட்டங்களும் ஆகும்.

37. **அரசுசாரா அமைப்பு மன்றம்:–** அரசுசாரா அமைப்பு மன்றம் என்பது சென்னை மாநகராட்சி எல்லைக்குள் இயங்கும் அல்லது சென்னை மாநகராட்சி எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட குடிமைச் சங்கங்கள் அல்லது அந்த சங்கங்களின் பிரநிதிகளை கொண்டு சென்னை மாநகராட்சியினால், இதற்கென தனியே விதிகள் வகுக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்ட ஒரு கூட்டமைப்பினை குறிக்கும்.

38. **தொல்லைகளை இனம் காணுபவர்கள்:–** தொல்லைகளை இனம் காணுபவர்கள் என்ற சொல் சென்னை மாநகராட்சியினால் இந்த விதிகளை அமலாக்கம் செய்ய, இந்த விதிகள் கடைபிடிக்கப்படுவதை கண்காணிக்க, மற்றும் இந்த விதிகளை மீறுபவர்களை இனம்காண நியமிக்கப்பட்ட அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட அதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களைக் குறிக்கும்.

39. **வசிப்பவர்/குடியிருப்போர்:–** யாரொருவர் எந்த ஒரு நிலத்தை அல்லது நிலத்தில் அல்லது கட்டடத்தை அல்லது கட்டடத்தில் அந்த சமயத்தில் வசிக்கிறாரோ அல்லது உபயோகப்படுத்துகிறாரோ அல்லது அந்த நிலத்தை அல்லது கட்டடத்தை அல்லது அதன் ஒரு பகுதியை எந்த ஒரு பயன்பாட்டிற்கும் எவர் ஒருவர் பயன்படுத்துகிறாரோ அவர் அந்த இடத்தில் வசிப்பவர் அல்லது அந்த இடத்தில் குடியிருப்பவர் ஆவார்.

40. **உரிமையாளர்:–** எந்த ஒரு நிலத்தின் அல்லது கட்டடத்தின் உரிமையை யாரொருவர் பயன்படுத்துகிறாறோ அவர் அந்த நிலத்தின் அல்லது கட்டடத்தின் உரிமையாளர் என்று பொருள்படும்.

41. **நபர்:–** நபர் என்பது எந்த ஒரு தனிநபர் அல்லது நபர்கள் ஆகியவர்களைக் குறிக்கும். மேலும் அது எந்த ஒரு கடை அல்லது நிறுவனம் அல்லது கூட்டாண்மை நிறுவனம் அல்லது அவைகள் அதற்கென உள்ள சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், நிறுமம் அல்லது தனிநபர்களின் அமைப்பு ஆகியவைகளையும் குறிக்கும்.

42. **குறித்த இடத்திலிருந்து குப்பை சேகரித்தல்:–** சென்னை மாநகராட்சியினால் குறிப்பிடப்படும், பொதுமக்கள் குப்பையினை வந்து வழங்க வேண்டிய இடங்களிலிருந்து திடக்கழிவுகளை சேகரிக்கும் முறை, குறித்த இடத்திலிருந்து குப்பையை சேகரித்தல் என்று பொருள்படும்.

43. **கட்டடம்:–** சென்னை மாநகராட்சி சட்டத்தில் கட்டடம் என்ற சொல்லுக்கு என்ன பொருள் வழங்கப்பட்டுள்ளதோ அதே பொருள்படும்.

மேலும்

(1) அது வசிப்பதற்காக, வியாபாரம் செய்வதற்காக, ஒரு தொழில் செய்ய, ஒரு சேவையினை செய்ய, வணிகம் புரிய, திருமணங்கள், விழாக்கள், விருந்துகள், கூட்டங்கள், கண்காட்சிகள் திட்டமிட்டு நடத்தப்படும் நிகழ்ச்சிகள் போன்ற அரசின் அல்லது தனியாரின் செயல்பாடுகளுக்காக எந்த ஒரு நிலம் அதில் கட்டுமானம் இருந்தாலும் அல்லது திறந்தவெளியாக இருந்தாலும் அவைகளையும்

(2) வாகனங்களை நிறுத்துவதற்காக அல்லது சாலை வியாபாரிகளுக்காக, உள்ள சாலையின் எந்த ஒரு பகுதியினையும்

(3) ஒரு பணியிடத்தில் பணிக்கான பொருட்களை வைத்திருப்பதற்காக உள்ள சாலையின் எந்த ஒரு பகுதியினையும்

(4) வாகனங்களின் போக்குவரத்துக்காக உள்ள சாலையினைத் தவிர எந்த ஒரு பொது அல்லது தனியாரின் பயன்பாட்டுக்காக பயன்படும் இடங்களையும்
உள்ளடக்கும்.

ஆனால், வாகனங்கள் சென்றுவரப் பயன்படுத்தப்படும் சாலைகள் இதில் அடங்காது.

44. **பதனிடுதல்:–** பதனிடுதல் என்ற சொல்லிற்கு நகராட்சி திடக்கழிவுகள்(மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகள் 2000ல் சொல்லப்பட்டுள்ள பொருள்படும்.

45. **பொது இடம் என்பது:–** பொதுமக்கள் செல்வதற்கு மற்றும் நுழைவதற்கு உரிமை பெற்ற, சாலைகள், பாதைகள், சந்துகள், நடைபாதைகள், நெடுஞ்சாலைகள், பாலங்கள், சதுக்கங்கள், அதில் நுழைந்து செல்ல வழி இருந்தாலும் இல்லாவிட்டாலும், உள்ள பொது இடங்கள், பூங்காக்கள், தோட்டங்கள், மனமகிழ்ச்சி அடையும் திடல்கள், விளையாட்டுத் திடல்கள், கடற்கரைகள், நீர்நிலைகள், நீர் ஆதாரங்கள், பொது வர்த்தக மையங்கள், அரசு மற்றும் நகராட்சி கட்டடங்கள், பொது மருத்துவமனைகள், அங்காடிகள், இறைச்சிக்கூடங்கள், நீதி மன்றங்கள் மற்றும் இன்ன பிற இது போன்ற இடங்கள் பொது இடங்களாகும்.

**46 கொள் கலன்:–** கொள்கலன் என்பது எந்த ஒரு வகையைச் சார்ந்த குப்பையையும் சேர்த்து வைக்கும் எந்த ஒரு குப்பையை வைக்கும் பொருள், தொட்டிகள் மற்றும் பைகளைக் குறிக்கும்.

**47. மறு சுழற்சி செய்தல்:–** மறுசுழற்சி செய்தல் என்பது நகராட்சி திடக்கழிவுகள்(மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகள் 2000ல் என்ன பொருள்படுமோ அதே பொருள்படும்.

**48. குப்பை அகற்றல் கட்டணம்:–** குப்பை அகற்றல் கட்டணம் என்பது, சென்னை மாநகராட்சியினால் பல்வேறு வகையான குப்பையினை சேகரிக்க, போக்குவரத்து செய்ய மற்றும் களைய அவ்வப்போது அறிவிக்கையின் மூலம் அறிவிக்கப்படும் கட்டணம் குப்பை அகற்றல் கட்டணமாகும்.

மேலும் வர்த்தக நிறுவனங்களினால் உருவாக்கப்படும் பல்வேறு வகையான குப்பையினையும் அந்தந்த வகை குப்பையினை களைய சென்னை மாநகராட்சியினால் நிர்ணயிக்கப்படும் வர்த்தக குப்பை அகற்றல் கட்டணத்தையும் அது குறிக்கும்.

**49. அட்டவணை:–** அட்டவணை என்பது இந்த விதிகளுடன் சேர்க்கப்பட்டுள்ள அட்டவணையினைக் குறிக்கும்.

**50. குப்பையினை தரம் பிரித்தல்:–** குப்பையினை தரம் பிரித்தல் என்பது, குப்பையினை தரம் பிரித்தல் என்ற சொல்லுக்கு நகராட்சி திடக்கழிவுகள்(மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகள் 2000ல் சொல்லப்பட்டுள்ள பொருள்படும்.

**51. குப்பை உருவாகும் இடம்:–** குப்பை உருவாகும் இடம் என்பது குப்பையை உருவாக்கும் ஒரு கட்டடம் அல்லது தரம் பிரிக்கப்பட்ட குப்பையினை வைத்திருப்பதற்காக ஒரு கட்டடத்தின் அல்லது பல கட்டடங்களின் உரிமையாளர் அல்லது அதில் குடியிருப்பவர்களால் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் ஒரு சமுதாய குப்பைத் தொட்டியினைக் குறிக்கும்.

**52. சுத்திகரிக்கப்பட்ட அழுகக் கூடிய குப்பை:–** சுத்திகரிக்கப்பட்ட அழுகக்கூடிய குப்பை என்பது இயந்திரங்கள் மூலம் அல்லது உயிரியல்ரீதியில் அதில் உள்ள கிருமிகள் அழியும் வகையில் சுத்திகரிக்கப்பட்ட அழுகக்கூடிய குப்பையினைக் குறிக்கும். அழுகக்கூடிய குப்பைகள் இவ்வாறு சுத்திகரிக்கப்பட்ட பின்னரே கையாளப்பட வேண்டும்.

**53. சேர்த்துவைத்தல்:–** குப்பை கண்ட இடத்தில் போடப்படாமல், பூச்சிகளின் தொல்லை ஏற்படாமல், சுற்றித்திரியும் விலங்குகளினால் தொல்லை பயக்கப்படாமல், அதிக அளவில் துர்நாற்றம் வீசப்படாமல் தற்காலிகமாக வைத்திருப்பதற்கு குப்பையினை சேர்த்து வைத்தல் என்று பொருள்படும்.

**54. பூங்கா கண்காணிப்பாளர்:–** பூங்கா கண்காணிப்பாளர் என்பவர், சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் வரும் பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள் அமைக்கப்படுதல் மற்றும் அவைகளை பராமரித்தல் ஆகிய பணிகளுக்கு பொறுப்பு வகிக்கும் துறைக்கு தலைமை வகிப்பவரைக் குறிக்கும்.

**55. போக்குவரத்து:–** போக்குவரத்து என்பது குப்பையினை ஒரு இடத்திலிருந்தும் மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்லுதலைக் குறிக்கும்.

**56. வார்டு:–** வார்டு என்பது சென்னை மாநகராட்சியின் ஆட்சி நிலவரையில் வரும் சென்னை மாநகராட்சியின் எந்த ஒரு வார்டின் நிலவரையினை குறிக்கும்.

**57. வார்டு அலுவலகம்:–** வார்டு அலுவலகம் என்பது ஒரு வார்டின் நிர்வாக பணிகளை செயலாக்க உள்ள நிர்வாக அலுவலகத்தை குறிக்கும். இது அந்தந்த மண்டல அலுவலரின் கட்டுப்பாட்டில் வரும்.

குறிப்பிட்டு தெரிவிக்கப்படாவிடில், இவ்விதிமுறைகளில் உள்ள வாசகங்கள், வார்த்தைகள் சென்னை மாநகர மாநகராட்சி சட்டத்தில் காணும் பொருள்படும்.

**4 குப்பையினை கண்ட இடங்களில் போடாதிருத்தல்:–**

(1) எந்த ஒரு கட்டடத்தின் உரிமையாளரோ அல்லது குடியிருப்பவர்களோ பொது இடங்களிலும் மற்றும் பொது நீர்நிலைகளிலும் மற்றும் வடிகால் அல்லது சாக்கடைகளில் எந்த ஒரு கழிவினையும் போடக்கூடாது.

(2) எந்த ஒரு நபரும், பொது இடங்களில் நீராடவோ, எச்சில் துப்பவோ, சிறுநீர்கழிக்கவோ, மலஜலம் கழிக்கவோ, விலங்குகளுக்கு அல்லது பறவைகளுக்கு உணவளிக்கவோ, வாகனங்கள், பாத்திரங்கள் அல்லது இன்ன பிற பொருட்களை கழுவுதலோ, கூடாது.

(3) ஒவ்வொரு நபரும், அவருக்கு சொந்தமான அல்லது அவரின் உபயோகத்தில் இருக்கும் எந்த ஒரு கட்டடத்தின் முன்புறம் அல்லது அருகாமையில் உள்ள முற்றத்தை, பொது இடத்தை, நடைபாதையினை தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

5. குப்பையினை தரம் பிரித்தல், சேர்த்து வைத்தல், வழங்குதல்:–

(1) ஒவ்வொரு நபரும் தங்களால் உருவாக்கப்படும் கழிவுகளை கீழ்வரும் ஆறு வகைகளாக அவைகள் உருவாகும் இடத்திலேயே தனியாக பிரித்து சேர்த்து வைக்கவேண்டும்.

(i) அழுகக்கூடிய(ஈரப்பதம் வாய்ந்த) கழிவுகள்

(ii) இல்லங்களில் உருவாகும் அபாயகரமான கழிவுகள்

(iii) மருத்துவக்கழிவுகள்

(iv) கட்டுமான மற்றும் இடிபாட்டுக்கழிவுகள்

(v) மரங்களை அலங்கரிப்பதற்காக கத்தரித்த கழிவுகள் உட்பட அதிகஅளவிலான தோட்டம் மற்றும் தோட்டம் சார் கழிவுகள்

(vi) மறு சுழற்சி செய்யக்கூடிய மற்றும் மறு சுழற்சி செய்ய இயலாத கழிவுகள் உட்பட மற்ற அனைத்து வகையான (உலர்ந்த) கழிவுகள்

(2) குடியிருப்பு வளாகங்கள் மற்றும் பலமாடிக் கட்டடங்கள் ஆகியவைகளில் இருப்பவர்கள் கழிவுகளை கலக்காமல் தரம் பிரிக்கப்பட்டதாக சேர்த்து வைத்து வழங்க வேண்டும்.

(3) தரம்பிரிக்கப்பட்ட அழுகக்கூடிய கழிவுகள் உரமாக மாற்றப்படாவிட்டால், அவைகள், இல்லத்திற்குள்ளேயே சேர்த்து வைக்கப்பட்டு அவைகளை சேகரிக்க வரும் சென்னை மாநகராட்சி வாகனங்களில் போட வேண்டும். இத்தகைய கழிவுகளை அதிக அளவில் உருவாக்கும் உணவு விடுதிகள், உணவகங்கள், வணிகக்கட்டடங்கள், உணவருந்தும் நிலையங்கள், மகிழகங்கள், பணியாளர் உணவுவிடுதிகள், அங்காடிகள் அதற்கென குறித்த இடத்தில் இத்தகைய கழிவுகளை வழங்க வேண்டும்.

(4) அதிக அளவில் கழிவுகளை உருவாக்குபவர்கள் அத்தகைய கழிவுகளை சென்னை மாநகராட்சி குறிப்பிடும் இடத்தில் கொண்டு சென்று சேர்க்க வேண்டும்.

(5) கழிவுகளை அதிக அளவில் உருவாக்குபவர்கள், மற்றும் புதிய கட்டுமானங்களின் உரிமையாளர்கள்/அவைகளை கையகத்தே வைத்திருப்பவர்கள் அங்கு உருவாகும் அழுகும் கழிவுகளை அந்த இடத்திலேயே உரமாக மாற்ற வேண்டும். இடவசதி இல்லாத காரணத்தினால் அவ்வாறு உரமாக மாற்ற இயலாத நிகழ்வுகளில் மாற்று ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

(6) கட்டுமான மற்றும் கழிவுகள் அவைகள் உருவாக்கப்படும் இடத்திலேயே சேர்த்து வைக்கப்பட்டு இதற்கென உள்ள சென்னை மாநகராட்சி தகவல் மையத்திற்கு தகவல் அளிக்கவேண்டும். சென்னை மாநகராட்சி தனது வாகனத்தில் அல்லது ஒப்பந்ததாரர்களின் வாகனம் மூலம் அவைகளை வெளியேற்றும். இதற்கென இக்கழிவுகளை உருவாக்குபவர்கள் அகற்றல் கட்டணத்தை சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும்.

(7) மறுசுழற்சி செய்யக்கூடிய மற்றும் மறு சுழற்சி செய்ய இயலாத அனைத்து உலர் கழிவுகளையும் அவைகளை உருவாக்குபவர்கள் சேர்த்து வைத்திருந்து அவற்றை சென்னை மாநகராட்சி அறிவிக்கும் இடங்களில் உள்ள குறிப்பிட்ட நேரத்தில் வரும் சேகரிப்பு வாகனங்களில் வழங்க வேண்டும்.

(8) அதிக அளவில் உருவாகும் தோட்ட மற்றும் தாவர கழிவுகள், அவைகள் உருவாகும் இடத்திலேயே உரமாக மாற்றப்பட வேண்டும். அவ்வாறு இயலாத நிகழ்வுகளில் சென்னை மாநகராட்சி அத்தகைய கழிவுகளை ஒரு குறிப்பிட்ட கால அட்டவணை முறையில் சேகரிக்கும். அதற்கென இத்தகைய கழிவுகளை உருவாக்குபவர்கள் போக்குவரத்து கட்டணமாக சென்னை மாநகராட்சிக்கு நிர்ணயிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும். அந்நிகழ்வுகளில் தோட்டங்களில் தாவரங்கள் குப்பை சேகரிக்கும் வாகனங்கள் வருவதற்கு முந்தைய நாளில் தான் வெட்டபட அல்லது கத்தரிக்கப்பட வேண்டும்.

(9) எந்த ஒரு கழிவினையும் எரித்தலின் மூலம் அழிப்பது கட்டாயமாக தடை செய்யப்படுகிறது.

(10) இந்த விதிகளை மீறுபவர்களுக்கு அபராதம் என்று அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள அபராதங்கள் விதிக்கப்படும்.

**6. சென்னை மாநகராட்சியின் சட்டபூர்வமான பொறுப்புகள்:–** கீழ்வருவன சென்னை மாநகராட்சியின் சட்டபூர்வமான பொறுப்புகளாகும்.

**(1) உள்கட்டமைப்பு வசதிகள்:–**

(i) குடிமக்கள் இந்த விதிகளை பின்பற்ற தேவையான கீழ்வரும் உள்கட்டமைப்பு வசதிகளைச் செய்தல்

(ii) குப்பை தொட்டிகள் வைத்தல்

(iii) சமுதாய குப்பை தொட்டிகளை வசதியாக அமைத்திடல்

(iv) உலர் குப்பைகள் பிரிக்கும் மையங்கள் கட்டுதல் அல்லது அமைத்தல்

(v) எங்கெல்லாம் இயலுமோ அங்கெல்லாம் குப்பையை எருவாக்கும் மையங்கள் கட்டுதல் அல்லது அமைத்தல்

(vi) குடிசைப்பகுதிகளில் போதுமான எண்ணிக்கையில் கழிப்பறை வசதிகள் மற்றும் குளியலறை வசதிகளை ஏற்படுத்துதல்

**(2) மக்களுக்கான தகவல் ஆதாரங்கள்:–** சென்னை மாநகராட்சி பொது மக்களின் தகவலுக்காக குப்பை தொட்டிகளின் வகைகள் மற்றும் அவைகளின் விற்பனையாளர்கள், தனியார் குப்பை அகற்றும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் நிறுவனங்களின் முகவரிகள், குப்பை அகற்றும் பணியினை செய்து வரும் தன்னார்வ மற்றும் அரசு சாரா அமைப்புகளின் பெயர்கள் மற்றும் அவர்களின் முகவரிகள் போன்ற விவரங்களை அவர்களின் இணைய தளத்தில் பதிவு செய்யலாம்.

**(3) வர்த்தக குப்பை அகற்றும் கட்டணம்:–** சென்னை மாநகராட்சி வர்த்தக நிறுவனங்கள், உணவு விடுதிகள், உணவகங்கள், திருமண மண்டபங்கள் ஆகியவர்களிடமிருந்து வர்த்தக குப்பை அகற்றல் கட்டணத்தை வசூலிக்க வேண்டும். மேலும் இவ்வாறு வசூலிக்கப்பட வேண்டிய கட்டணத்தை சென்னை மாநகராட்சி இதற்கென சில காரணிகளை அளவு கோலாக கொண்டு கணித்து நிர்ணயித்து வசூலிக்க வேண்டும். இந்த கட்டணம் மாதந்தோறும் அல்லது அரையாண்டுக்கு அல்லது ஆண்டுக்கு ஒரு முறை வசூலிப்பதாக இருக்கலாம். தேவைப்படின் சென்னை மாநகராட்சி இதற்கென விதிகளையும் இயற்றலாம். இதற்காக மதிப்பீட்டாளர்கள் மற்றும் தண்டலர்களையும் சென்னை மாநகராட்சி நியமிக்கலாம்.

**(4) குப்பையை உரமாக்குதல்:–** ஒவ்வொரு கட்டடத்திலும் அதன் உரிமையாளர் அல்லது அங்கு குடியிருப்பவர் அல்லது அங்கு வசிப்பவர், அவர்கள் உருவாக்கும் அழுகக்கூடிய குப்பையை அந்த கட்டடத்திற்குள்ளேயே உரமாக மாற்ற வேண்டும். அவ்வாறு அவர்கள் மாற்றும் உரத்தினை சென்னை மாநகராட்சியின் ஒவ்வொரு பூங்காவிலும், அவர்கள் தங்களின் உபயோகத்திற்கு போக எஞ்சியிருக்கும் உரத்தை, தாங்களே கொண்டு வந்து பூங்காவின் பொறுப்பாளரிடம் அளிக்கலாம் அதற்காக எந்த தொகையும், போக்குவரத்து கட்டணம் உட்பட, அவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது. மேலும், சென்னை மாநகராட்சி உரம் தயாரிக்கும் மற்றும் கொள்முதல் செய்யும் நிறுவனங்கள் ஏதேனும் இருந்தால் அவைகளின் விவரங்களை சென்னை மாநகராட்சி தங்களது இணைய தளத்தில் வெளியிடலாம். பொது மக்கள் தாங்கள் தயாரிக்கும் உரத்தை விற்க அல்லது வழங்க அவர்களை அணுகலாம்.

**(5) உள்ளூர் உரத்தயாரிக்கும் தொழிற்கூடங்கள்:–** சென்னை மாநகராட்சி பொதுப்பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், கேளிக்கை திடல்கள், தோட்டங்கள், அங்காடிகள், சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பரந்த நிலங்கள் ஆகிய இடங்களில் குப்பையை உரமாக்கும் தொழிற்கூடங்களை இயன்றவரையில் சென்னை மாநகராட்சி தாங்களாகவோ அல்லது தனியார் ஒப்பந்த முறையிலோ அமைக்க வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் உரத்தொழிலகங்கள் பொதுமக்களுக்கு எந்த ஒரு தொல்லையும் மற்றும் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இன்றியும் பராமரிக்கப்பட வேண்டும்.

**(6) அழுகக்கூடிய பூஜைப்பொருட்கள்:–** ஒவ்வொரு மண்டல அலுவலரும் கடற்கரைகள், ஏரிக்கரைகள், குளக்கரைகள் ஆகிய நீர்நிலைகளுக்கு அருகில் மக்கள் மலர்கள், இலைகள், பழங்கள் போன்ற அழுகக்கூடிய குப்பையினை போட சில இடங்களை தீர்வு செய்ய வேண்டும். அந்த இடங்களில் அந்த குப்பையை போட தேவையான குறிப்பிட்ட வகை கொள்கலங்களை வைக்க வேண்டும். அந்த கொள்கலங்களில் போடப்படும் குப்பை அந்தந்த மண்டல அலுவலரால் அகற்றப்பட்டு அதற்கென தனியாக தகுந்த இடத்தில் ஒரு உரம் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைக்கப்பட்டு உரமாக மாற்றப்பட வேண்டும். இதற்கென தனியாக பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டும். அல்லது இருக்கின்ற பணியாளர்களை இதற்கென தனியாக நியமிக்க வேண்டும்.

**(7) குறிப்பிடப்பட்ட இடங்களிலிருந்து குப்பையை சேகரித்தல்:–** சென்னை மாநகராட்சி ஒவ்வொரு குறிப்பிடப்பட்ட பொது இடங்களிலிருந்து குப்பையை அகற்ற குப்பை வண்டியை(மணி அல்லது ஒலியெழுப்பி பொருத்தப்பட்ட வண்டி) அனுப்பவேண்டும். அல்லது தனியார் மூலம் அகற்ற வேண்டும். அந்த குறிப்பிட்ட பகுதியில்தான் பொதுமக்கள் குப்பையினை போடவேண்டும். அந்த வண்டிகள் எங்கெங்கு எந்த நேரத்தில் வரும் என்பதை மண்டல அலுவலர் குறிப்பிட்டு அறிவிப்பு வெளியிட வேண்டும். மேலும் எந்த வகை குப்பைகளுக்கு அவ்வாறு எந்தெந்த வண்டிகள் வரும் என்றும் குறிப்பிட வேண்டும். மண்டல அலுவலர் இந்த குப்பை சேகரிக்கும் பணியை தனியார் மூலமாகவும் நிறைவேற்றலாம்.

**(8) குப்பையை அவைகள் உருவாகும் இடத்திற்கு சென்று சேகரித்தல்:–** சென்னை மாநகராட்சி வீடுகளிலிருந்தும் மற்றும் கட்டடங்கள் மற்றும் பலகட்டடங்கள் உள்ள வளாகத்திலுள்ள குப்பைதொட்டிகளிலிருந்தும் குப்பையை சேகரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த குப்பை சேகரிப்புப்பணி முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட நேரமுறைப்படி நடைபெறவேண்டும்.

**(9) பொது இடங்களில் சமுதாய குப்பைத் தொட்டி:–** குப்பையை வீட்டுக்கு வீடு சென்று அல்லது அவைகள் உருவாகும் இடத்திற்கு சென்று சேகரிக்க இயலாத நிகழ்வுகளில் பொதுஇடங்களில் எங்கெல்லாம் அவசியம் என்று அந்தந்த மண்டல அலுவலர்கள் கருதுகிறார்களோ அங்கிருந்து குப்பையை சேகரிக்க சென்னை மாநகராட்சி சமுதாய குப்பை தொட்டியை அமைத்து பராமரிக்க வேண்டும். இதனை தனியார் மூலமும் சென்னை மாநகராட்சி நிறைவேற்றலாம். இந்த சமுதாய குப்பை தொட்டிகளில் இரண்டு பாகங்கள் அல்லது பிரிவுகள் இருக்க வேண்டும். அதாவது ஒன்று அழுகக்கூடிய குப்பையை கொட்டவும் மற்றொன்று அழுகாத குப்பையை கொட்டவும் ஆகும். இந்த சமுதாய குப்பை தொட்டி முறை நகராட்சி திடக்கழிவுகள்(மேலாண்மை மற்றும் கையாளல்) விதிகள் 2000ல் சொல்லப்பட்டுள்ள குப்பையை தரம் பிரித்து கையாளுவதை செயலாக்கும் வகையில் இருக்க வேண்டும்.

**(10) சமுதாய குப்பைத் தொட்டிகள் குறித்த தகவல்கள்:–** எந்தெந்த பகுதி மக்களுக்காக எந்தெந்த பகுதிகளில் சமுதாயக் குப்பைத்தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன அல்லது கட்டப்படும் என்ற தகவல்களை அந்தந்த வார்டு அலுவலகம், பகுதி அலுவலகம், மற்றும் மண்டல அலுவலகங்களில் அறிவிப்பு வெளியிட வேண்டும். அது குறித்த தகவல்களை சென்னை மாநகராட்சியின் இணைய தளத்திலும் வெளியிடலாம்.

**(11) உலர் குப்பையை பிரித்தெடுக்கும் மையங்கள்:–** அந்தந்த மண்டல அலுவலர்கள் தேவையான வார்டுகளில் பொது இடங்களில் உலர் மற்றும் மறுசுழற்சிக்கு பயன்படும் குப்பைகளை பிரித்தெடுக்க மையங்களை அமைக்க வேண்டும். இதில் சென்னை மாநகராட்சி சேகரிக்கும் குப்பையிலிருந்து மறு சுழற்சிக்கு பயன்படும் பொருட்களை பிரித்தெடுக்க வேண்டும். இந்த செயல்பாடு ஒப்பந்தம் வழங்கப்பட்ட ஒப்பந்ததாரர் அல்லது உரிமம் வழங்கப்பட்ட குப்பை பிரித்தெடுப்போர் மூலம் செயல்படுத்தப்பட வேண்டும். தனிப்பட்ட நபர்களுக்கு குப்பையிலிருந்து மறு சுழற்சிக்கு பயன்படும் பொருட்களை பிரித்து எடுத்துச் செல்ல உரிமம் வழங்குவதானால் இதற்கென உரிமம் வழங்கும் முறையினை முறைபடுத்த சென்னை மாநகராட்சி தனியே விதிகளை இயற்ற வேண்டும். ஆயினும், குப்பை அகற்றும் பணி ஒப்பந்த முறையில் செயலாக்கப்படும் நிகழ்வுகளில் சேகரிக்கப்படும் குப்பைகள் தரம்பிரிக்கப்படும் நிகழ்வுகளில் இம்மாதிரி தனியே விதிகள் இயற்ற வேண்டிய அவசியம் இல்லை. மேலும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களுக்கு இந்த நிபந்தனை பொருந்தாது. ஆனால் ஒப்பந்த முறையில் மறுசுழற்சிக்கு பயன்படும் குப்பைகளை எடுத்துச் செல்ல தனியாருக்கு உரிமம் வழங்குகின்ற நிகழ்வுகளில் ஒப்பந்தப்புள்ளி முறை பின்பற்றப்பட வேண்டும். இந்த செயல்பாட்டில் எதற்கும் உதவாத எஞ்சிய கழிவுகள் குப்பை கொட்டும் வளாகத்தில் களையப்பட வேண்டும்.

குப்பையிலிருந்து மறு சுழற்சிக்கு பயன்படும் பொருட்களை பிரித்தெடுப்போர்கள் அப்பொருட்களை விற்பனை செய்ய அவைகளை கொள்முதல் செய்யும் வியாபாரிகளை தேடி நீண்ட தூரம் செல்வதைத் தவிர்க்க அவர்களுக்கு உதவும் நோக்கத்துடன் குப்பையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பொருட்களை கொள்முதல் செய்யும் வியாபாரிகளுக்கு இந்த குப்பை பிரித்தெடுக்கும் மையங்களில் சென்னை மாநகராட்சி இடம் தரலாம். அதற்காக வாடகையாக அல்லது குத்தகை தொகையாக சென்னை மாநகராட்சி ஒரு தொகையினை வசூலிக்கலாம். மேலும் அவ்வாறு வியாபாரிகளுக்கு இடமளிக்கும் போது ஒப்பந்தப்புள்ளி முறையினை சென்னை மாநகராட்சி பின்பற்ற வேண்டும்.

**(12) குப்பை சேகரிப்பு கால அட்டவணை மற்றும் வழித்தட அட்டவணை:–**

(i) அழுகக்கூடிய குப்பை

(ii) மறுசுழற்சிக்குப் பயன்படக்கூடிய குப்பை

(iii) மறுசுழற்சிக்குப் பயன்படாத குப்பை

(iv) இல்லங்களில் உருவாகும் அபாயகரமான குப்பை

(vi) மருத்துவக் கழிவுகள்

ஆகியவைகளை அகற்ற வாகனங்கள் அல்லது குப்பை வண்டிகள் எந்தெந்த வகை குப்பையை அகற்ற எந்த நேரத்தில் வரும் மற்றும் எந்தெந்த இடத்தில் எந்தெந்த நேரத்தில் வரும் என்ற கால அட்டவணை மற்றும் அவைகளின் வழித்தட அட்டவணையை அந்தந்த மண்டல அலுவலர்கள் முன்கூட்டியே வெளியிட வேண்டும். மேலும் இந்த விவரங்கள் சென்னை மாநகராட்சியின் இணைய தளத்திலும் வெளியிடப்படலாம். இது போலவே

(i) கட்டுமான மற்றும் இடிபாட்டுக்கழிவுகள்

(ii) தோட்ட மற்றும் தாவரக்கழிவுகள்

ஆகியவைகளை அகற்ற உள்ள கால அட்டவணையினையும் வெளியிட வேண்டும்.

**(13) உள்ளூர் மக்கள் குழு:–** அந்தந்தப்பகுதியில் உள்ள மக்கள் குழுவாக இணைந்து அவரவர்கள் பகுதியில், குப்பை சேகரித்தல் மற்றும் அவைகளை போக்குவரத்து செய்தல் மற்றும் உரம் தயாரித்தல், அவைகளை தரம் பிரித்தல், மறுசுழற்சிக்குப்பயன்படும் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் குப்பையினை சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் வளாகத்திற்கு கொண்டு வந்து கொட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலர் அனுமதி வழங்கலாம். மேலும் இதற்காக அந்த குழு அங்கு குடியிருப்போர்கள் தன்னார்வத்துடன் அளிக்கும் நன்கொடைகளையும் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் யாரிடமும் கட்டாயப்படுத்தி எந்த தொகையும் எந்த ஒரு குழுவும் வசூலிக்கக்கூடாது. இவ்வாறு அனுமதிக்கப்படும் ஒரு குழு இந்திய சங்கங்கள் சட்டம் அல்லது இந்திய கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்கள் ஒரே பகுதியில் மேற்சொன்ன பணிகளை நிறைவேற்ற விண்ணப்பித்தால் மண்டல அலுவலர் அவர்களில் ஒருவருக்கு மட்டும், அதற்கான காரணங்களை பதிவு செய்து அனுமதி வழங்கலாம். சென்னை மாநகராட்சி தேவைப்படின் இதற்கென தனியே விதிகளை இயற்றலாம். ஆயினும் சென்னை மாநகராட்சி இத்தகைய அமைப்புகளுக்கு அவர்கள் மேற்கொள்ளும் பணிகளுக்காக எந்த ஒரு தொகையும் வழங்குதல் அவசியம் இல்லை.

**(14) சிறப்பு தூய்மை முகாம்கள்:–** இந்த விதிகளை முழுமையாகவும் திறம்படவும் அமலாக்க அந்தந்த மண்டல அலுவலர்கள் சிறப்பு தூய்மை முகாம்களை நடத்தலாம். இந்த முகாம்கள் மண்டல அலுவலரால் அவசியம் என்று இனம்காணப்படும் வார்டுகளில் அல்லது உள்ளூர் வார்டு மன்ற உறுப்பினர் அல்லது உள்ளூர் மக்கள் அல்லது குடியிருப்போர் நலச்சங்கங்கள் ஆகியவர்களின் முறையீட்டின்படி நடத்தப்படலாம். இப்பணியில் பொதுமக்களையும் கலந்து கொண்டு பணியாற்றச் செய்யலாம். அவ்வாறு சிறப்பு தூய்மை முகாம்களை நடத்தும் போது அதற்கு தேவையான பொருட்களையும், கருவிகளையும் மற்றும் தளவாடங்களையும் மண்டல அலுவலர் சென்னை மாநகராட்சியின் செலவில் தருவிக்கலாம்.

**(15) கல்வி மற்றும் பயிற்சி:–** சுற்றுச்சூழல் தூய்மை பற்றிய விழிப்புணர்வை மக்கள் அடைய சென்னை மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை துறையின் மற்றும் இதனுடன் தொடர்புடைய மற்ற அலுவலர்கள் மற்றும் குப்பை சேகரித்தல், அகற்றுதல் பணிகளை செய்யும், மேற்பார்வை செய்யும், கண்காணிக்கும் செயல்படுத்தும் பணியாளர்கள் ஆகியவர்களுக்கும், மற்றும் இப்பணியினை செயலாக்கும் சங்கங்கள் மற்றும் செயலாக்க விரும்பும் சங்கங்கள் மற்றும் உள்ளூர் மக்கள் சங்கங்கள், குடியிருப்போர் சங்கங்கள், குடிசைப்பகுதி மக்கள், கடைகள், கூவிவிற்கும் வியாபார்கள், அலுவலக மற்றும் வணிக வளாகங்கள் மற்றும் தொழிற் கூடங்கள் ஆகியவற்றிற்கும் கல்வி மற்றும் பயிற்சி அளிக்க சென்னை மாநகராட்சி ஏற்பாடு செய்ய வேண்டும். தேவைப்பட்டால் சென்னை மாநகராட்சி இந்த கல்வி மற்றும் பயிற்சியினை நடத்த அதற்கென உள்ள விழைதொழில் புரிவோர்களையும் நியமித்துக்கொள்ளலாம்.

**(16) பரிசுகள் வழங்குதல்:–** சென்னை மாநகராட்சி சிறந்த முறையில் தன்னார்வத்துடன் குப்பை சேகரிக்கும் பணிகளை மற்றும் அகற்றும் பணிகளை மேற்கொண்டு வெற்றியுடன் செயலாக்கும் சங்கங்களுக்கு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு பரிசுகள் வழங்கி அது குறித்த பதிவேடுகள் பராமரித்து அதில் உள்ள விவரங்களை சென்னை மாநகராட்சியின் இணைய தளத்திலும் வெளியிடலாம்.

**(17) புகார்கள்:–** மேற்பார்வை பொறியாளர், இணைய தளத்தின் மூலம் புகார்களை பெறும் வசதியினை ஏற்படுத்த வேண்டும். அந்த முறையில் பெறப்படும் புகார்கள் பதிவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு புகார்தாரருக்கு பதில் அளிப்பதும் முறைபடுத்தப்பட வேண்டும்.

**(18) மக்கள் தூய்மைக் குழு:–** பொதுமக்கள், மக்கள் தூய்மைக் குழுவினை நிறுவி அதன் மூலம் சென்னை மாநகராட்சியின் தூய்மை பணிகளுக்கான முகாம்களில் பங்கேற்கலாம். அதில் அவர்களது பங்களிப்பை அளிக்கலாம். மேலும் திடக்கழிவு மேலாண்மை தொடர்பான பணிகளை ஆய்வு செய்து மேற்பார்வை பொறியாளருக்கு அவரது மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். அவ்வாறு பெறப்பட்ட தகவல்கள் சம்பந்தப்பட்ட அலுவலருக்கு மேலனுப்பப்படவேண்டும்.

மேலும் மண்டல அலுவலர்களும் மேற்பார்வை பொறியாளரும் பொதுமக்கள் தூய்மைக்குழுவிடமிருந்து இவ்வாறு பெறப்படும் அறிக்கைகளை ஆய்வு செய்து அவைகளில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களை செயலாக்குவற்கான சாத்தியக் கூறுகள் குறித்து முடிவெடுக்கலாம்.

**(19) ஒப்பந்தப்புள்ளிகள்:–** மேற்பார்வை பொறியாளர், எந்த ஒரு பகுதியினையும் தூய்மையாக பராமரிக்கும் ஒரு திட்டத்தை, அல்லது குப்பை தரம் பிரித்தல், மறுசுழற்சி செய்தல், குப்பைப் பதனிடுதல், மற்றும் அந்த திட்டங்களை செயலாக்க நிலம் வழங்குதல் ஆகியவற்றிற்காக விளம்பரத்தின் மூலம் ஒப்பந்தப்புள்ளிகளை அழைக்கலாம். மேலும் அந்த விளம்பரங்களை சென்னை மாநகராட்சியின் இணைய தளத்திலும், உரிய விதிமுறைகளுக்கு உட்பட்டு, வெளியிட வேண்டும். இந்த நடவடிக்கைகள் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான விதி முறைப்படி எடுக்கப்பட வேண்டும்.

**(20) திடீர் சோதனைகள்:–** இந்த விதிகளை மக்கள் கடைபிடிப்பதை ஊக்குவிக்க ஒவ்வொரு மண்டல அலுவலரும் அவரவர்களின் நிர்வாக ஆட்சி நிலவரைக்குள் எப்போது வேண்டுமானாலும் ஆய்வு மற்றும் சோதனை செய்யலாம். மேலும் அவர் இந்த விதிகளை செயல்படுத்தாத மற்றும் மீறுபவர்களுக்கு அபராதம் விதிக்கலாம்.

**(21) அமலாக்கப்படை:–** தொல்லை பயப்பவர்களை இனம் காண்பவர்களை மற்றும் அமலாக்கப்படையினை, அவர்களுக்கு தகுந்த சீருடைகள் மற்றும் வாகனங்கள் வழங்கி இந்த முறையினை தலைமை பொறியாளர் பலப்படுத்தலாம். மேலும் பொதுமக்களால் அல்லது தன்னார்வ அமைப்புகளால் அல்லது குடியிருப்போர் சங்கங்களினால் தொல்லை பயப்பவர்கள் குறித்து புகார் அளிக்கப்பட்டால் அதன் மீது தலைமை பொறியாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட அலுவலருக்கு மேலனுப்ப வேண்டும்.

இவ்வாறு தொல்லை பயப்பவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் அபராதத்தொகைகள் கருவூலத்தில், அவைகளை வசூலிப்பவர்களால், செலுத்தப்பட்டு அதற்கான ஒப்புகை சீட்டு அல்லது செலுத்துச்சீட்டு பெறப்பட வேண்டும். ஒவ்வொரு மண்டலத்திலும் இவ்வாறு வசூலிக்கப்படும் அபராதத்தொகை பற்றிய கணக்குகளை பராமரிக்கும் பணியினை அந்தந்த மண்டல உதவி வருவாய் அலுவலரிடம் மண்டல அலுவலர் ஒப்படைக்க வேண்டும்.

**(22) புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கும் முறை:–** புகார்களின் மீது உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படாமை மற்றும் தவறாக அபராதம் வசூலிக்கப்பட்டது, போதுமான உள்கட்டமைப்புகள் செய்துதரப்படாமை போன்ற இந்த விதிகள் சம்பந்தமாக குறைகளை இனங்காணவும் மற்றும் அவைகளை ஆராய்வு செய்து தீர்க்கவும் ஒரு முறையினை மேற்பார்வை பொறியாளர் அவர்கள் உருவாக்கலாம்.

**(23) கூட்டு சீராய்வு குழு:–** இந்த விதிகள் பின்பற்றப்படுவதை சீராய்வு செய்ய தலைமை பொறியாளர், குடியிருப்போர் நலச்சங்கங்கள், தன்னார்வ அமைப்புகள் மற்றும் அரசுசாரா அமைப்புகளை உள்ளடக்கி ஒரு குழுவினை அமைக்கலாம்.

**(24) ஆண்டு செயல் திட்டம்:–** சென்னை மாநகராட்சி ஒவ்வோர் ஆண்டும் திடக்கழிவு மேலாண்மை பற்றிய செயல்திட்டம் குறித்து ஒரு அறிக்கையினை தயாரித்து அதனை சென்னை மாநகராட்சியின் இணைய தளத்தில் வெளியிட வேண்டும்.

**(25) அதிகாரப்பகிர்வு:–** மேற்பார்வை பொறியாளர் இந்த விதிகளின் கீழ் நிறைவேற்றப்பட வேண்டிய செயல் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்புகளை அவரின் கீழ் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பகிர்ந்தளிக்கலாம். அத்தகைய விவரங்கள் சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் இடம் பெற செய்யலாம்.

**(26) ஒளிவு மறைவின்மை மற்றும் தகவல் பெற மக்களுக்கு உள்ள நுழைவுரிமை:–** பொதுமக்கள் திடக்கழிவு மேலாண்மை பற்றிய விவரங்களை அறிய இதற்கென உள்ள அரசுசாரா அமைப்பினையும் அணுகலாம். அதெற்கென சென்னை மாநகராட்சி ஒரு அரசுசாரா அல்லது ஒரு சமுதாய அமைப்பினை நியமித்து அவர்களிடம் பொதுமக்களுக்கான தகவல்களை தெரிவிக்கலாம். இவ்வாறான நியமனங்களைப் பற்றிய விவரங்களை சென்னை மாநகராட்சி தங்களது இணைய தளத்திலும் வெளியிட வேண்டும். தேவைப்படின் இதற்கென ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் சென்னை மாநகராட்சி அந்த அமைப்புகளிடம் ஏற்படுத்திக்கொள்ளலாம். ஆயினும் இதற்காக எந்த ஒரு தொகையும் எந்த ஒரு அமைப்பிற்கும் வழங்கப்படலாகாது.

**(27) பிற அரசுசார் நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்:–** பிற அரசுசார் நிறுவனங்களுடன் மற்றும் அமைப்புகளுடன், இந்த விதிகளை நிறைவேற்ற சென்னை மாநகராட்சி தங்களின் ஆட்சி நிலவரைக்குள், ஒருங்கிணைந்து செயல்படலாம்.

**7. தனி தன்மை வாய்ந்த இனங்கள் மற்றும் தனிமாதிரியான சூழ்நிலைகளில் சென்னை மாநகராட்சியின் மற்றும் குப்பையை உருவாக்குபவர்களின் பொறுப்புகள்:–**
சில சிறப்பு இனங்களின் தன்மையை கருத்தில் கொண்டு, கீழ்வரும் பொறுப்புகள் அளிக்கப்படுகின்றன.

**(1) குடிசைப்பகுதிகள்:–**

சென்னை மாநகராட்சியின் பொறுப்புகள்:–

(i) குடிசைப்பகுதிகளின் தூய்மைப்பணியினை சிறப்பு கவனத்துடன் செயலாக்க வேண்டும். அதற்கென சமுதாய அமைப்புகள், அரசுசாரா அமைப்புகள் முன்வந்தால், அந்த அமைப்புகளின் செயல் திறனை ஆய்வு செய்து அவர்களுக்கு சென்னை மாநகராட்சி அனுமதி வழங்கலாம். ஆயினும் அந்த அமைப்புகள் பொதுமக்களிடம் அல்லது எவர் ஒருவரிடமும் வற்புறுத்தி எந்த தொகையும் அல்லது எந்த கட்டணமும் அல்லது நன்கொடையும் வசூலிக்கக்கூடாது என்ற நிபந்தனையுடன்தான் அனுமதி வழங்க வேண்டும்.

(ii) குறிப்பிட்ட நேரத்தில் குடிசைப்பகுதிகளில் குப்பையினை சேகரிக்க, மண்டல அலுவலர்கள் குப்பை வண்டியை அனுப்ப வேண்டும்.

(iii) அவ்வாறு குப்பை வண்டியினை அனுப்பும் முறையை ஏற்படுத்த காலதாமதமாகும் நிகழ்வுகளில் மண்டல அலுவலர்கள் சமுதாய குப்பைத் தொட்டிகளை, தரம் பிரிக்கப்பட்ட குப்பையினை குடிசைப்பகுதி மக்கள் போடுவதற்கு ஏதுவாக, வைக்க வேண்டும். சமுதாய அமைப்புகளிடம் குடிசைப்பகுதியின் தூய்மையை பராமரிக்கும் பணி ஒப்படைக்கப்பட்ட இடங்களில் அந்த சமுதாய அமைப்புகள் இவ்வாறு வைக்கப்பட்ட சமுதாய குப்பைத் தொட்டிகளை பராமரிக்க வேண்டும். இந்த சமுதாய குப்பைத் தொட்டிகளிருந்து குப்பையை தினசரி அகற்ற மண்டல அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(iv) குடிசைப்பகுதிகளின் தூய்மையை தொடர்ந்து பராமரிக்க மண்டல அலுவலர்கள் அவ்வப்போது தீவிர தூய்மைப் பணிகளை நிறைவேற்றவேண்டும். இதற்காக மண்டல அலுவலர்கள் உள்ளூர் மக்களையும் மற்றும் வார்டு மன்ற உறுப்பினர்களையும் சமுதாய அமைப்புகளையும் ஒருங்கிணைத்து செயல்படலாம். இந்த பணிக்கு தேவையான கருவிகள் தளவாடங்கள் மற்றும் பணியாளர்களை மண்டல அலுவலர்கள் வழங்கலாம்.

**(2) குறிப்பிடப்பட்ட இறைச்சிக்கூடம் மற்றும் அங்காடிகள் தவிர அனைத்து கோழிப்பண்ணை, மீன் அங்காடி மற்றும் இறைச்சிக்கூடக் கழிவுகளை அகற்றுதல்:–**

குறிப்பிடப்பட்ட இறைச்சிக்கூடம் மற்றும் அங்காடிகள் தவிர அனைத்து கோழிப்பண்ணை, மீன் அங்காடி மற்றும் இறைச்சிக்கூடங்களிலிருந்தும், அவைகளின் உரிமையாளர்கள் மற்றும் அவைகளை தங்களின் கையகத்தே வைத்திருப்பவர்கள், அதில் நடைபெறும் ஏதேனும் ஒரு வணிக நடவடிக்கையின் காரணமாக உருவாகும் கழிவுகளை தனியாக சுகாதார முறையில் சேர்த்து வைக்க வேண்டும். அவ்வாறு சேர்த்து வைக்கப்பட்டுள்ள கழிவுகளை, குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தில் சேகரிக்க வரும் சென்னை மாநகராட்சியின் வாகனங்களில் போட வேண்டும். இந்த கழிவுகளை வேறு எந்த ஒரு சமுதாய குப்பைத் தொட்டிகளிலும் அல்லது வேறு எந்த ஒரு இடத்திலும் போடக்கூடாது. அவ்வாறு போடப்பட்டால் அந்த செயலுக்கு அபராத அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள விகிதத்தில் அபராதம் வசூலிக்கப்படும்.

இவ்வாறு இவ்வகை கழிவுகளை அகற்ற சென்னை மாநகராட்சி தனியாருக்கு ஒப்பந்தம் வழங்குவதன் மூலமும் நிறைவேற்றலாம்.

**(3) வியாபாரிகள் மற்றும் கூவி விற்பவர்கள்:–** ஒவ்வொரு வணிகரும், கூவி விற்பவரும், தாங்கள் உருவாக்கும் அழுகக்கூடிய மற்றும் இன்ன பிற கலக்கப்படாத கழிவுகளை தனியே அவர்களின் விற்பனை தளத்தில் ஒரு தொட்டியில் அல்லது ஒரு கொள்கலத்தில் அல்லது ஒரு பையில் சேர்த்து வைத்திருக்க வேண்டும். அவ்வாறு சேர்த்து வைக்கப்படும் கழிவுகளை சென்னை மாநகராட்சியின் குப்பை வண்டி வரும் போது அந்த வண்டியில் போட வேண்டியது ஒவ்வொரு வியாபாரியின் கடமையாகும். மேலும் இவ்வாறு உருவாகும் குப்பையினை போட குப்பைத் தொட்டிகளையும் சென்னை மாநகராட்சி வைக்கலாம். அவ்வாறு குப்பை தொட்டிகள் வைக்கப்படும் இடங்களில் வியாபாரிகள் அவர்களால் உருவாக்கப்படும் கழிவுகளை குப்பைதொட்டிகளில் தான் போட வேண்டும். அல்லது அவர்களுக்கு அருகாமையில் உள்ள சமுதாயக் குப்பைத் தொட்டிகளில் இந்த குப்பையினை போடலாம். அவ்வாறு செய்யத் தவறுபவர்கள் மீது அபராத அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள அபராதங்கள் வசூலிக்கப்படும்.

**(4) வீட்டுக்குப்பை குழி:–** ஒவ்வொரு இல்லங்களிலும் மற்றும் கட்டடங்களிலும் கழிவுகளை உருவாக்குபவர்கள், தங்களின் வீட்டில் அதை குழியில் போட்டு களையக்கூடாது. அவர்கள் உருவாக்கும் குப்பையை தரம் பிரித்து சென்னை மாநகராட்சியின் குப்பை வண்டி வரும் போது அதில் போட வேண்டும். அல்லது அதற்கென அருகாமையில் உள்ள சமுதாய குப்பைத் தொட்டிகளில் போட வேண்டும். இவ்வாறு செய்யத் தவறுபவர்கள் மீது அபராத அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள அபராதங்கள் வசூலிக்கப்படும். சென்னை மாநகராட்சி இப்பணியை தனியார் மூலமும் நிறைவேற்றலாம்.

மேலும் தங்களின் கட்டடங்களில் அல்லது வீடுகளில் சேகரித்து வைக்கப்படும் குப்பையை சென்னை மாநகராட்சி அகற்ற வேண்டும் என்று குப்பையை உருவாக்குபர்கள் விரும்பினால், அவர்கள் அதற்கென சென்னை மாநகராட்சி நிர்ணயிக்கும் கட்டணத்தை செலுத்த வேண்டும். மேலும் சென்னை மாநகராட்சி இப்பணியை தனியார் மூலமும் செயலாக்கலாம். இந்நிகழ்வுகளில், குப்பை அகற்ற வருபவர்களுக்கு அவைகளை உருவாக்குபவர்கள் அவர்கள் சேர்த்து வைத்திருக்கும் குப்பையை அகற்றும் இடத்திற்கு சென்று அகற்ற நுழைவுரிமையை அளிக்க வேண்டும்.

**(5) அன்புடன் வளர்க்கப்படும் பிராணிகளால் உருவாக்கப்படும் கழிவுகள்:–**

எந்த ஒருவராலும் வளர்க்கப்படும் நாய், பசு, போன்ற பிற உயிரினங்களால் ஏதேனும் கழிவு உருவாக்கப்பட்டால் அந்த கழிவை அவர்களே அகற்ற வேண்டும். அவ்வாறு அகற்றத் தவறினால் அவர்களுக்கு அபராத அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள விகிதத்தில் அபராதம் வசூலிக்கப்படும்.

**(6) பொதுக்கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் உருவாகும் கழிவுகளை அகற்றுதல்:–** பேரணி, கண்காட்சிகள், கண்டன ஊர்வலங்கள் மற்றும் போராட்டங்கள் மற்றும் இன்ன பிற பொது இடங்களில் நடை பெறும் மற்றும் பொதுக் கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் குப்பை உருவாக்கப்பட்டால் அவைகளை அகற்ற சென்னை மாநகராட்சிக்கு அந்த கூட்டங்களை மற்றும் நிகழ்ச்சிகளை நடத்துபவர்கள் திரும்பப் பெறத்தக்க வகையிலான சென்னை மாநகராட்சி நிர்ணயிக்கும் தொகையினை வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும். அந்த நிகழ்ச்சி நடந்த இடத்தில் குப்பை உருவாகாமல் இருப்பதை உறுதி செய்வது அந்த நிகழ்சி நடத்துபவர்களின் கடமையாகும். அல்லது அவ்வாறு உருவாக்கப்பட்ட குப்பையினை அவர்கள் தங்கள் செலவில் சென்னை மாநகராட்சி அமைத்துள்ள அருகாமையில் உள்ள சமுதாய குப்பைத் தொட்டிகளில் சேகரித்து போட வேண்டும். இல்லாவிட்டால் சென்னை மாநகராட்சி அந்த குப்பையினை அகற்றும் செலவினை அந்த நிகழ்ச்சி நடத்துபவரிடமிருந்து வசூலிக்கலாம். அந்த தொகை அவர் செலுத்தியுள்ள வைப்புத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படலாம். மேலும், சென்னை மாநகராட்சி இவ்வாறு உருவாக்கப்படும் குப்பையை தனியார் மூலமும் நிறைவேற்றலாம். இதற்கான கட்டண விகிதங்களை சென்னை மாநகராட்சி மன்றத்தின் ஒப்புதல் பெற்று நிர்ணயிக்கலாம்.

**8. விதிகளை மீறுபவர்களுக்கு அபராதம் விதித்தல்:–** இந்த விதிகள் அமலுக்கு வந்த நாளிலிருந்து கீழ்வருமாறு புரிந்து கொள்ளல் காலம் அல்லது எச்சரிக்கை காலம் இருக்கும். அது முடிந்த பிறகு இந்த விதிகளை மீறுபவர்களிடம் ஒவ்வொரு விதி மீறலுக்கும் தினசரி அடிப்படையில் அல்லது மீண்டும் மீண்டும் மீறுபவர்களிடம் அபராத அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள விகிதத்தில் அபராதம் வசூலிக்கப்படலாம்.

(i) குப்பையினை கண்ட இடத்தில் போடுதல், தொல்லை பயத்தல், பொது இடங்களை தூய்மையாக பராமரித்தல் போன்றவற்றிற்கு புரிந்துகொள்ளல் மற்றும் எச்சரிக்கை காலம் ஒருமாதம். இந்த காலக்கட்டத்தில், அபராத அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள அபராத விகிதத்தில் பாதி அபராதத் தொகை தான் வசூலிக்கப்பட வேண்டும்.

(ii) குப்பையினை தரம் பிரித்தல், சேர்த்து வைத்தல், வழங்குதல் மற்றும் சேகரித்தல் போன்றவற்றிற்கு புரிந்துகொள்ளல் மற்றும் எச்சரிக்கை காலம் ஒரு மாதம். இந்த கால கட்டத்தில், அபராதம் எதுவும் வசூலிக்கப்படக் கூடாது. ஆனால் வீட்டுக்கு வீடு குப்பை சேகரிக்கும் சேவை வழங்கப்படும் இடங்களிலும் மற்றும் சமுதாய குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ள இடங்களுக்கும் மற்றும் தூய்மை பகுதிகள் என்று அறிவிக்கப்பட்ட இடங்களுக்கும் இந்த புரிந்து கொள்ளல் மற்றும் எச்சரிக்கை காலம் கிடையாது.

(iii) இந்த விதிகளை தூய்மை பகுதி என்று அறிவிக்கப்படும் இடங்களில் மீறுபவர்களுக்கு அபராதம் இரு மடங்காக வசூலிக்கப்படலாம்.

(iv) இந்த விதிகளை மீண்டும் மீண்டும் மீறுபவர்களிடம் அதிகபட்சமாக ஐந்து மடங்கு வரையில் அபராத அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள அபராதத்தை வசூலிக்கலாம்.

(v) ஒவ்வோர் ஆண்டும் அபராத அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள அபராதத்தொகையில் ஒவ்வோர் இனத்திற்கும் ரூபாய் ஐந்து அல்லது ஐந்து சதவிகிதம் இதில் எது அதிகமோ அது அல்லது ஆணையர் கருத்தில் எது நியாயம் என்று உணரப்படுகிறதோ அவ்விதத்தில் அதிகரிப்பு செய்து வசூலிக்கப்பட வேண்டும். இந்த அபராத அதிகரிப்பு, இந்த விதிகள் அமலுக்கு வந்த நாளிலிருந்து முழுமையாக ஓராண்டு முடிந்து அடுத்து துவங்கும் நிதியாண்டிலிருந்து அமலாக்கப்பட வேண்டும்.

இந்த அபராதங்களை வசூலிக்கும் அதிகாரத்தை ஆணையர் தன்கருத்தில் பொருத்தமானவர்கள் என நினைக்கும் பதவியினை வகிப்பவர்களுக்கு பகிர்ந்தளிக்கலாம்.

**9. சந்தேகங்கள்:–** இந்த விதிகளை புரிந்து கொள்வதில் ஏதேனும் சந்தேகம் தோன்றினாலோ, அல்லது இந்த விதிகளில் முரண்பாடுகள் இருந்தோலோ அந்த சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கவும் முரண்பாடுகளுக்கு தீர்வு காணவும் சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அதிகாரம் உண்டு.

**திக.மே.து.ந.க.எண்.எ7/ 4069/2007**

அட்டவணை–1

| வரிசை எண் | விதி எண். | விதி விவரம் | விதி மீறலுக்கான அபராதத் தொகை ரூபாய் |
|---|---|---|---|
| 1 | 4(1) | கண்ட இடத்தில் குப்பையை போடுதல் | 100.00 |
| 2 | 4(2) | கண்ட இடத்தில் எச்சில் துப்புதல் | 50.00 |
| 3 | 4(2) | பொது இடத்தில் குளித்தல் | 50.00 |
| 4 | 4(2) | பொது இடத்தில் சிறுநீர் கழித்தல் | 50.00 |
| 5 | 4(2) | பொது இடத்தில் மலஜலம் கழித்தல் | 50.00 |
| 6 | 4(2) | குறிப்பிட்ட இடத்தை தவிர மற்ற இடங்களில் விலங்குகளுக்கு/பறவைகளுக்கு உணவளித்தல் | 50.00 |
| 7 | 4(2) | பொது இடங்களில் வாகனங்களை கழுவுதல் | 100.00 |
| 8 | 4(2) | பொது இடங்களில் பாத்திரங்கள்/துணிகள்/இன்ன பிற பொருட்களை கழுவுதல் | 50.00 |
| 9 | 4(3) | பொது இடங்களை சுத்தமாக பராமரிக்காமை ஒரு கட்டடத்தின் உரிமையாளர்/குடியிருப்பவர்களைப் பொருத்தவரை | 100.00 |
| | 4(3) | பொது இடங்களை சுத்தமாக பராமரிக்காமை ஒரே ஒரு கட்டடத்தின் உரிமையாளர்/குடியிருப்பவர்களைத் தவிர மற்றவர்களுக்கு | 1000.00 |
| 10 | 5(1) மற்றும் (2) | குறிப்பிடப்பட்டபடி குப்பையை தரம் பிரிக்காமல் வழங்குதல் மற்றும் சேர்த்து வைத்தல்<br>தனியொரு நபருக்கு | 100.00 |
| | 5(3) மற்றும் (4) | குறிப்பிடப்பட்டபடி குப்பையை தரம் பிரிக்காமல் வழங்குதல் மற்றும் சேர்த்து வைத்தல்<br>அதிக அளவில் குப்பையை உருவாக்குபவர்களுக்கு | 500.00 |
| 11 | 5(3) | குறித்தபடி அழுகும் குப்பைகளை தரம் பிரிக்காமல் வழங்குபவர்களுக்கு | 100.00 |
| 12 | 5(5) | புதிய கட்டுமானங்களில் அதிக அளவில் குப்பை உருவாக்குபவர்கள் 6 மாதங்களுக்குள் குப்பையை உரமாக்காமல் இருப்பவர்களுக்கும் மற்றும் குப்பையை உரமாக்க வேண்டிய பொறுப்பு கொண்ட மற்றவர்களுக்கும் | 100.00<br>ஒரு நாளைக்கு |
| 13 | 6(12) | இல்லங்களில் உருவாகும் அபாயகரமான கழிவுகளை குறிப்பிடப்பட்ட முறையில் வழங்காதவர்களுக்கு | 500.00 |
| 14 | 6(12) | மருத்துவக்கழிவுகளை குறிப்பிடப்பட்ட முறையில் பிரித்தெடுத்து வழங்காதவர்களுக்கு | 500.00 |
| 15 | 6(12) | கட்டுமான கழிவுகளை குறிப்பிடப்பட்ட முறையில் பிரித்தெடுத்து வழங்காதவர்களுக்கு | 500.00 |
| 16 | 6(7) | உலர்ந்த கழிவுகளை குறிப்பிடப்பட்ட முறையில் வழங்காதவர்களுக்கு | 100.00 |
| 17 | 6(8) | தோட்ட மற்றும் மரம் கத்தரித்த தாவரக் கழிவுகளையும் குறிப்பிடப்பட்ட முறையில் வழங்காதவர்களுக்கு | 1000.00 |
| 18 | 6(9) | குப்பையினை அதற்கென குறித்த சமுதாய குப்பைதொட்டிகளில் அல்லது அதற்கென குறித்த குப்பை சேகரிப்பு வசதிகளில் அன்றி பிற இடங்களில் போடுபவர்களுக்கு | 100.00 |
| 19 | 5(9) | குப்பையினை தீயிட்டு கொளுத்துவதன் மூலம் அழிப்பவர்களுக்கு | 500.00 |

| | | | |
|---|---|---|---|
| 20 | 7(2) | மீன் மற்றும் கோழிப்பண்ணை மற்றும் இறைச்சிக் கழிவுகளை மற்ற குப்பையிலிருந்து பிரிக்காமல்(இல்லங்களில் உருவாகாத) வழங்குபவர்களுக்கு | 500.00 |
| 21 | 7(3) | குப்பை கொள்கலம் அல்லது குப்பை கூடை இல்லாமல் வியாபாரம் செய்யும் வியாபாரி/மற்றும் கூவி விற்பனை செய்பவர்களுக்கு | 100.00 |
| | | குப்பையை தரம் பிரித்து வழங்காத வியாபாரி/கூவி விற்பனை செய்பவர்களுக்கு | 100.00 |
| 22 | 7(4) | வீட்டின் அருகாமைமையை தூய்மையாக வைத்திருக்காதவர்களுக்கு | 1000.00 |
| | | குப்பையை தரம் பிரிக்காமல் வழங்கும் இல்லத்தாருக்கு | 500.00 |
| 23 | 7(5) | சொந்த விலங்குகளால் உருவாக்கப்படும் கழிவுகளை கண்ட இடங்களில் போடுபவர்களுக்கு | 50.00 |
| 24 | 7(6) | ஒவ்வொரு பொது நிகழ்ச்சிக்குப் பிறகும் அந்நிகழ்ச்சி நடந்த இடத்தை 24 மணி நேரத்திற்குள் தூய்மை செய்யாதவர்களுக்கு | தூய்மை பாதுகாப்புத் தொகையை பறிமுதல் செய்தல் |

## அட்டவணை 2

### அழுகும் மற்றும் மறுசுழற்சிக்குப்பயன்படும் கழிவுகளின் விளக்கப்பட்டியல்

| அழுகக்கூடிய கழிவுகள் | மறுசுழற்சிக்கு பயன்படக்கூடிய கழிவுகள் |
|---|---|
| அழுகக்கூடிய கழிவுகள் என்பது ஈரப்பதம் உள்ள தாவர மற்றும் விலங்கு கழிவுகள் | மறுசுழற்சிக்கு பயன்படும் கழிவுகள் என்பது உலர் கழிவுகளை, ஒரு செயல்முறை மூலம் புதிய தயாரிப்புப்பொருட்களை உருவாக்கும் மூலப்பொருட்களாக, அது அசல் பொருளைப்போலவோ அல்லது மாறுபட்டோ இருந்தாலும், மாற்ற இயலும் கழிவுகளாகும். |
| • தேநீர் இலை, முட்டை ஓடுகள், பழ மற்றும் பழச்சக்கைகள் உட்பட அனைத்து சமையலறை கழிவுகளும்<br>• இறைச்சி மற்றும் எலும்புகள்<br>• மலர் உட்பட தோட்ட மற்றும் உதிர்ந்த இலைகள்<br>• விலங்கினங்களால் உருவாகும் கழிவுகள்<br>• மண்கலந்த அழுக்கான காகிதம்<br>• வீட்டினை சுத்தப்படுத்தியதில் உருவாகும் தூசி<br>• தேங்காய் மட்டைகள்<br>• சாம்பல்கள் | • செய்திதாள்கள்<br>• காகிதம், புத்தகம் மற்றும் பருவ இதழ்கள்<br>• கண்ணாடி<br>• உலோகப்பொருட்கள் மற்றும் மின்சார கம்பிகள்<br>• பிளாஸ்டிக்<br>• கந்தைத் துணிகள்<br>• தோல்<br>• ரெக்ஸின்<br>• ரப்பர்<br>• மரக்கட்டை/மேசை நாற்காலி போன்ற வசதிப்பொருட்கள்<br>• சிப்பப்பொருட்கள்(பொருட்களை கட்டிவரும் பொருட்கள் அல்லது கட்ட உபயோகப்படும் பொருட்கள்) |

**<u>தி.க.மே.து.ந.க.எண்.எ7/ 4069/2007</u>**

<u>அட்டவணை 3</u>

| இல்லங்களில் உருவாகும் குறிப்பிட்ட அபாயகரமான கழிவுகள் |
|---|
| ‘‘ அபாயகரமான கழிவுகள் ’’ என்பது சில குறித்த சூழ்நிலையில் எளிதில் தீ பிடிக்கக்கூடிய, தீக்கு உடனடியாக வயப்படக்கூடிய, அல்லது வெடிக்கக்கூடிய, அல்லது அரித்தலுக்கு, உட்படக்கூடிய அல்லது அரிப்புத்தன்மை ஏற்படுத்தக்கூடிய கழிவுகள் என்பது பொருள்படும். |
| • ஏரோசெல் கேன்கள்<br>• ஒளி விளக்குகளில் பயன்படுத்தக்கூடிய அல்லது பயன்படுத்துப்படும் மின்கலங்கள் மற்றும் பட்டன் செல்கள்<br>• உந்து வண்டிகளில் பயன்படுத்தப்படும் மின்கலங்கள், எண்ணெய் வடிகட்டிகள் மற்றும் உந்துவண்டியினை பாதுகாக்கும் தயாரிப்புகள் மற்றும் உந்து வண்டிக்கான நுகர்பொருட்கள்<br>• வேதியல் பொருட்கள் கரையும் பொருட்கள் மற்றும் அவைகளை வைத்திருந்த காலி கொள்கலங்கள்<br>• அழகு சாதனப்பொருட்கள், வேதியல் அடிப்படையிலான பூச்சிக்கொல்லிகள் மற்றும் அவைகளை வைத்திருந்த கொள்கலங்கள்<br>• விளக்கு குமிழ்கள், குழல் விளக்குகள் மற்றும் சிறிய அளவு கொண்ட ஆவி விளக்குகள்<br>• தேவையில்லை என்று களையப்பட்ட மருந்துப்பொருட்கள்<br>• வர்ணங்கள், எண்ணெய்கள், உயவு எண்ணெய்கள், க்ளூஸ், வர்ணம் கரைப்பான்கள், அவைகளை வைத்திருந்த காலி கொள்கலங்கள்<br>• நிழற்பட தொழிலில் உபயோகப்படுத்தும் வேதியல் பொருட்கள்<br>• புதிய பொருட்களை கட்டி வரும் மென்மையான பஞ்சுபோன்ற வேதியல் தன்மை வாய்ந்த சிப்பப்பொருட்கள்<br>• வெப்பமானிகள் மற்றும் பாதரசம் கொண்ட பொருட்கள் |

‘‘19.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.278/2007 நாள்.19.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’

‘‘20.12.2007 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.227/2007 நாள்.20.12.2007ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’

‘‘பேரணி, கண்காட்சிகள், கண்டன ஊர்வலங்கள் மற்றும் போராட்டங்கள் மற்றும் இன்ன பிற பொது இடங்களில் நடைபெறும் பொதுக்கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் குப்பை உருவாக்கப்பட்டால் அவைகளை அகற்ற சென்னை மாநகராட்சிக்கு அந்தக்கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை நடத்துபவர்கள் திரும்பப்பெறத்தக்க வகையிலான சென்னை மாநகராட்சி நிர்ணயிக்கும் தொகையினை வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும் என்பதிலிருந்து மன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் பொதுக் கூட்டங்களுக்கு விலக்களித்து நடைமுறைப்படுத்துவதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.’’

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: தி.க.மே.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

வ.து.ந.க.எண்.அ2/8004/2007

ஆணையாளர் அவர்களின் 14.01.2008 நாளிட்ட குறிப்பு

**31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.23/2008 பொருள் எண்.23

**பணியமைப்பு – வயது முதிர்வு ஓய்வு**

திரு.என்.கனிக்கண்ணன், உதவி வருவாய் அலுவலர் அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.01.2008ல் ஓய்வு பெற உள்ளார். இவர் 12.03.1975ல் வாடகை வசூலிப்பவராக சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்தார். இவருக்கு இப்பதவியில் 12.03.1975 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. பின்னர் 03.05.1976ல் வரி வசூலிப்பவராக பதவி உயர்வு அளிக்கப்பட்டு 03.05.1976 முதல் பணிவரன் முறை செய்யப்பட்டு 22.05.1978 முதல் தகுதிகாண் பருவ உரிமை வழங்கப்பட்டுள்ளது. பின்னர் 19.03.1997ல் உரிமம் ஆய்வாளராகவும், 13.12.1999 பிற்பகல் வரி மதிப்பீட்டாளராகவும் 21.06.2006ல் உதவி வருவாய் அலுவலராகவும், பதவி உயர்வு பெற்று பணி புரிந்து வருகிறார். இவரது பணிகள் உரிமம் ஆய்வாளர் பதவியில் 19.03.1997 முதலும் வரி மதிப்பீட்டாளர் பதவியில் 13.12.1999 பிற்பகல் முதலும் உதவி வருவாய் அலுவலர் பதவியில் 21.06.2006 முதலும் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது.

இவர் பணிபுரிந்த மண்டலங்களிலிருந்து தனியர் மீது தணிக்கைத்தடை ஏதும் நிலுவையில் இல்லையென சான்று பெறப்பட்டுள்ளது. விழிப்பு அலுவலர் அவர்களும் தனியர் மீது யாதொரு விசாரணையும் நிலுவையில் இல்லையென அறிக்கை அளித்துள்ளார். துறைப்பூர்வமான ஒழுங்கு நடவடிக்கையும் ஏதும் நிலுவையில் இல்லை, சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான குடியிருப்பு ஏதும் இவருக்கு ஒதுக்கப்படவில்லை. சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்திற்கு இவர் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஏதுமில்லை எனவும் சான்று பெறப்பட்டுள்ளது. இருப்பினும் தணிக்கைத் தடை இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி நிதி சம்மந்தப்பட்ட தணிக்கைத் தடைகளால் நிதி இழப்பு மற்றும் நீண்ட கால முன்பணம் சரி செய்யப்படாமல் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அதனை ஓய்வூதியப் பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்படுத்தி தனியரை 31.01.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி வழங்கலாம் என பரிந்துரைக்கப்படுகிறது. தனியர் வகுப்பு–2 சார்ந்த அலுவலராதலால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே இவரை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்க இயலும்.

எனவே, தணிக்கை தடைகள் மூலம் நிதி இழப்பு மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் அவைகளுக்கு பொறுப்பாக்கி திரு.என்.கனிக்கண்ணன், உதவி வருவாய் அலுவலர் என்பவரை 31.01.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: வ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

## 31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.24/2008 பொருள் எண்.24

**பணியமைப்பு – வயது முதிர்வு ஓய்வு**

திருமதி.எஸ்.ஜெயகுமாரி, தலைமை கணக்கு அலுவலர்(பொது) அவர்கள் 29.02.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார். தனியர் வகிக்கும் தலைமை கணக்கு அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியில் வகுப்பு 1ஏ–ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, இவ்வலுவலரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க அரசு உத்தரவு பெறப்படவேண்டும்.

தனியர் சென்னை மாநகராட்சியில் 30.10.1972 அன்று களப்பணியாளராக பணியில் சேர்ந்தார். 12.4.73 அன்று இளநிலை உதவியாளராகவும், 07.5.79 அன்று உதவியாளராகவும், 2.6.1997 அன்று பிரிவு மேலாளராகவும் 18.12.1998 அன்று கண்காணிப்பாளராகவும் பதவி உயர்வு பெற்றார். மேலும் 26.12.2001 முதல் உதவி கணக்கு அலுவலராகவும், தற்போது தலைமை கணக்கு அலுவலர்(பொது) பதவியில் 21.9.2007 முதல் பதவி உயர்வு பெற்று தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

அரசாணை பல்வகை எண்.525, ந.நி.ம.கு.வ.துறை நாள் 29.12.2006ல் திருமதி. எஸ். ஜெயகுமாரி, அவர்களுக்கு தற்காலிகமாக உதவி கணக்கு அலுவலராக வழங்கப்பட்ட நியமனம் 26.12.2001 முதல் உறுதியாக்கம் செய்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. அன்னார் கணக்கு அலுவலராக பணியாற்றிய துறைகளின் தணிக்கை அறிக்கைகள் பெறப்பட்டுள்ளதில், 2004–05 வரை உள்ள குறிப்பில் இவரை பொறுப்பாக்கும் தணிக்கை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2005 ஆண்டிலிருந்து தணிக்கை முடிவுற்ற பின்னர் ஏதும் இருப்பின் அதன் மீது நடவடிக்கை எடுத்து அதனை அன்னாரின் பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும். அதற்கான தனியரின் உறுதிமொழி கடிதம்பெறப்பட்டுள்ளது.

தனியருக்கு சென்னை மாநகராட்சி அலுவலரின் கூட்டுறவு கடன்தொகை ஏதுமில்லை என சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. அன்னார் மீது வேறு எந்த கடன்தொகைக்கான பிடித்தம் ஏதுமில்லை.

தனியரை 29.2.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதிக்க தணிக்கைத்தடை மற்றும் நிதி இழப்பீடுகளுக்கு இவர் பொறுப்பாகிறார் என்பது பின்னர் தெரியவரின் இவரது பணிக்கொடையில் மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தணைக்குட்பட்டு அனுமதி வழங்க அரசின் ஆணை வேண்டி செயற்குறிப்பு அனுப்ப வேண்டியுள்ளது.

எனவே, திருமதி. எஸ். ஜெயகுமாரி, தலைமை கணக்கு அலுவலர்(பொது) அவர்களை 29.2.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி வழங்க அரசிற்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.க.கு.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மகக.ந.க.எண்.அ2/2767/2007
ஆணையாளர் அவர்களின் 22.01.2008 நாளிட்ட குறிப்பு

**31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.25/2008 பொருள் எண்.25

**பணியமைப்பு – வயது முதிர்வு ஓய்வு**

திரு. எஸ். வெங்கட்ராமன், கணக்கு அலுவலர், மண்டலம்–4, அவர்கள் 31.01.2008 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார். தனியர் 12.3.1975 அன்று தட்டச்சராக சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்தார். 6.3.81 முதல் உதவியாளராகவும் 12.8.98 முதல் மேலாளராகவும் பதவி உயர்வு பெற்றார். பின்னர் 3.3.2000 அன்று முதல் கண்காணிப்பாளர் பதவி உயர்வில் 3 ஆண்டுகள் பணியாற்றி 13.11.2003 முதல் கணக்கு அலுவலராக பதவி உயர்வு பெற்று தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். அரசாணை பல்வகை எண்.525 ந.நி.ம.கு.வ.துறை நாள் 29.12.2006ல் திரு. எஸ். வெங்கட்ராமன் அவர்களுக்கு தற்காலிகமாக உதவி கணக்கு அலுவலராக வழங்கப்பட்ட நியமனம் 13.11.2003 முதல் உறுதியாக்கம் செய்து அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

தனியர் மீது துறை நடவடிக்கை ஏதும் நிலுவையில் மற்றும் ஆய்வில் இல்லை. மேலும், இவர் கணக்கு அலுவலராக பணியாற்றிய மண்டலம் 1, 2 மற்றும் மண்டலம் 4, கணக்கு அலுவலர் (கட்டிடம்) மற்றும் கணக்கு அலுவலர்(பணிகள்) ஆகிய துறைத் தலைவர்களிடம் அன்னார் மீது தணிக்கைத்தடை பற்றிய குறிப்புகள் பெறப்பட்டுள்ளது.

தனியர் உதவியாளராக பணிபுரிந்தபோது சென்னை மாநகராட்சியில் 1994 ஆண்டு பெற்ற வீடுகட்டும் முன்பணத்திற்கான கோப்பு இன்னும் முடிவுறப்படவில்லை. வீடு கட்டும் முன்பணத்தொகைக்குண்டான வட்டி பிடித்தங்கள் நவம்பர் 2007 வரை பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. அன்னார் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகை ஏதும் இல்லை.

இந்நிலையில், திரு. எஸ். வெங்கட்ராமன், கணக்கு அலுவலர், மண்டலம்–4, அவர்கள் 31.01.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளதால் அன்னாரை தணிக்கைத்தடை மற்றும் வீடுகட்டும் முன்பணம் நிலுவை மற்றும் பிற நிதி இழப்பீடுகளுக்கு இவர் பொறுப்பாகிறார் என பின்னர் தெரியவரின், அத்தொகையினை இவரது பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தணைக்குட்பட்டு அன்னாரை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.க.கு
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ8.சு.து.ந.க.எண்.எச்1/276/2007**
**ஆணையாளர் அவர்களின் 02.01.2008 நாளிட்ட குறிப்பு**

**31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.26/2008 பொருள் எண்.26

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மண்டலம்–8ல் பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 30.11.2007 அன்று ஓய்வு பெற்ற டாக்டர். திருமதி.பிருந்தா நிர்மல், மருத்துவ அலுவலர் அவர்கள் முதன்முதலாக சிறப்பு சத்துணவுத் திட்டத்தின் கீழ் உதவி அறுவை சிகிச்சை நிபுணராக 13.11.1975 அன்று பணியில் சேர்ந்தார். இவர் இப்பதவியில் சேர்ந்த நாளான 13.11.1975 அன்று பணிவரன்முறையும், அதனைத் தொடர்ந்து 25.05.1978 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர் அவர்களின் 11.10.2007 நாளிட்ட அறிக்கையில் இன்றைய தேதியில் தனியர் மீது விசாரணை ஏதும் இல்லை என அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகை ஏதும் நிலுவையில் இல்லை. மேலும் இவர்மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை.

டாக்டர்.பிருந்தா நிர்மல், மருத்துவ அலுவலர், அவர்கள் வயது முதிர்வு காரணமாக 30.11.2007 பிற்பகல் முதல் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். இவர் வகிக்கும் பதவி இரண்டாம் நிலையை சார்ந்ததால் மன்றத்தின் அனுமதியை பெற்ற பின்னரே பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்க இயலும். ஆனால் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் பின்னேற்பை எதிர்நோக்கி தணிக்கைத் தடைகள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு மற்றும் அலுவலக/ தனிப்பட்ட முன்பண நிலுவை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அவரது பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு 30.11.2007 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல ஆணையரின் ஆணை பெற்று பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

எனவே, டாக்டர். திருமதி.பிருந்தா நிர்மல், மருத்துவ அலுவலர் அவர்கள் மன்றத்தின் பின்னேற்பை எதிர்நோக்கி ஆணையரின் செயல்முறை ஆணைப்படி 30.11.2007 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: ம.அ.8
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.27/2008 பொருள் எண்.27

**ஓய்வூதியம்**

சென்னை மாநகராட்சியில், மேற்பார்வை பொறியாளர் (கட்டடம்) ஆகவும் பின்பு பணித்துறையில் நகர பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொ) ஆகவும் பணிபுரிந்து 31.05.2007 பி.ப. அன்று வயது முதிர்வின் காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெற்ற திரு.ஏ.பாலசுப்பிரமணியன், என்பவருக்கு கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்களை வழங்க சான்று எண்.2539/எ4/2007, நாள்.25.10.2007ல் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை சான்று வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஓய்வூதியம் 01.06.2007 முதல் மாதம் | ரூ.9507/– |
| இறப்பு மற்றும் ஓய்வுகால பணிக்கொடை | ரூ.3,50,000/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ.3169/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.6338/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.3.97,773/– |
| ஓய்வூதியரின் காலத்திற்குப் பின்னர் அன்னாரது மனைவி திருமதி. பா.சந்திரவதனா என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் மாதம் | ரூ.9507/– 11.05.2014 வரை<br>ரூ.5704/– 12.05.2014 முதல் |

32 ஆண்டுகள் 02 மாதங்கள் 07 நாட்கள் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த மேற்படி அலுவலரிடமிருந்து கீழ்கண்ட தொகை பிடித்தம் செய்ய வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 25 விழுக்காடு இறப்பு மற்றும் பணிக்கொடைத் தொகையிலிருந்து தணிக்கைத் தடைகள் நிவர்த்திக்காக | ரூ.87,500/– |

மேற்படி தனியரின் இறப்பு மற்றும் ஓய்வுக்கால பணிக்கொடையில் பிடித்தம் செய்யவுள்ள 25 விழுக்காடு தொகை அன்னாரின் மீதான தணிக்கைத் தடைகள் தீர்வு செய்யப்பட்ட பின்பு மீள வழங்கவும்,

இவர் சென்னை மாநகராட்சி 1(பி) வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, மேற்படி 25% தொகையினை பிடித்தம் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் சான்றின்படி ஓய்வூதியப் பயன்களை அளிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/24639/07**
**ஆணையாளர் அவர்களின் 10.01.2008 நாளிட்ட குறிப்பு**

**31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.28/2008 பொருள் எண்.28

**ஒய்வூதியம்**

திரு.ஜி.சுவாமிநாதன், உதவி வருவாய் அலுவலர், மண்டலம்–2, அவர்கள் கடந்த 31.01.2004 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.3950/எ4/2007, நாள்.29.11.2007ல் திருத்திய ஓய்வூதிய பயன்களின் விவரம் பின்வருமாறு.

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.5100/– 01.02.2004 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.5059/–ஐ நேர் செய்து மீதம் வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.2,13,384/–ஐ ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.2,11,627/–ஐ நேர்செய்து மீதம் தொகையான ரூ.1757/–ஐ வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி.கஸ்தூரி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.3060/– வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

29.11.2007 நாளிட்ட தணிக்கை சான்றின்படி தனியருக்கு திருத்திய ஓய்வூதியப் பயன்கள் வழங்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி4/24842/2007
ஆணையாளர் அவர்களின் 18.01.2008 நாளிட்ட குறிப்பு

31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.29/2008 பொருள் எண்.29

ஒய்வூதியம்

12.06.2005 நாளிட்ட ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, வயது முதிர்வு ஓய்வு பெற்ற திரு.டி.தயாள், செயற்பொறியாளர், கட்டிடங்கள் துறை அவர்களுக்கு தற்காலிக ஓய்வூதியம் ரூ.4429/— மட்டும் 01.06.2005 முதல் வழங்க தீர்வு செய்யப்பட்டுள்ளது.

19.12.2007 நாளிட்ட ஆணையர் அவர்களின் ஆணையில் தனியர் சென்னை மாநகராட்சிக்கு ஏற்படுத்திய இழப்பு குறித்து விவரம் அறியப்படாமையால் தனியரிடமிருந்து ரூ.20/—க்கான முத்திரை தாளில் படிவம்—9ல் பிணையாளர் ஒப்பத்துடன் உறுதி ஆவணம் பெறப்பட்டு, இதனடிப்படையில் தனியருக்கு தற்காலிக பணிக்கொடை தொகை ரூ.2,39,568/— மட்டும் வழங்க ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட தற்காலிக பணிக்கொடை தொகை ரூ.2,39,568/— வழங்க தனியர் இரண்டாம் நிலை அலுவலர் என்பதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே தீர்வு செய்யப்பட வேண்டும்.

எனவே, தனியருக்கு தற்காலிக பணிக்கொடை ரூ.2,39,568/— மட்டும் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/24430/07**
**ஆணையாளர் அவர்களின் 08.01.2008 நாளிட்ட குறிப்பு**

**31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண்.30/2008 பொருள் எண்.30

**ஒய்வூதியம்**

திரு.கே.ராஜ்குமார், கோட்ட மின்பொறியாளர், மின்துறை, அவர்கள் கடந்த 30.06.2004 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஒய்வு பெற்றார். தனியருக்கு ஏற்கனவே ஓய்வூதியம் மற்றும் இதர பயன்கள் வழங்கப்பட்டது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் கடித எண்.நி.மு.எண்.3936/எ4/2007, நாள்.19.11.2007ல் திருத்திய ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி தனியருக்கு கீழ்கண்டவாறு ஓய்வூதிய பயன்கள் திருத்தியமைத்து வழங்கப்பட வேண்டும்.

வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் ரூ.5650/– 01.07.2004 முதல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியம் தொகை ரூ.5336/–லிருந்து அதிகரித்து வழங்கவும், தொகுப்புத் தொகை ரூ.2,36,354/–ல் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.2,23,175/–ஐ நேர்செய்து மீதம் தொகையான ரூ.13,179/–ஐ வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி.கீதாராணி, என்பவருக்கு குடும்ப ஓய்வூதியம் ரூ.3390/– 10.06.2011 முதல் வழங்கப்படவேண்டும்.

அன்னார் சென்னை மாநகராட்சி பணியில் இரண்டாம் வகுப்பு அலுவலர் என்பதால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, 19.11.2007 நாளிட்ட தணிக்கைச்சான்றின்படி 01.07.2004 முதல் தனியருக்கு மேற்கண்டவாறு திருத்திய ஓய்வூதியப்பயன்கள் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு: பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி2/23802/2007
ஆணையாளர் அவர்களின் 27.12.2007 நாளிட்ட குறிப்பு

31.01.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண்.31/2008 பொருள் எண்.31

ஓய்வூதியம்

